Registered as a news paper.

பக்கங்கள்: பதினான்கு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்டுகளுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038

(சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 26 (14.08.2004) சனிக்கிழமை இதழ்:316

## அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்குமாம்!

### நிதியமைச்சர் அபாய அறிவிப்பு

(கொழும்பு)

எரிபொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு வழங்கிவருகின்ற மானியங்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் திடீர் முடிவை எடுத்திருப்பதால் அத்தியாவசியப் பொருட்களின் விலை பெருமளவில் அதிகரிக்கவுள்ளது.

டீசல் உள்ளிட்ட எரிபொருட்கள், பால்மா, சீனி, கிழங்கு, வெங்காயம் போன்ற பல்வேறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் எந்நேரமும் அதிகரிக்கப்பட வாய்ப்பிருப்பதாக அதிர்ச்சித் தகவலை நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம வெளியிட்டிருக்கிறார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கிராம அபிவிருத்தி தொடர்பான செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

உணவு உற்பத்திகளில் சிலவற்றுக்கு வழங்கப்பட்டுவரும் மானியங்களை எதிர்காலத்தில் விலக்கிக்கொள்ள நேரிடலாம்.

அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு முடிவுகளுக்கும் பாரிய எதிர்ப்புகளை எதிர்கொள்ள நேரிடும்.

டீசல் மற்றும் ஏனைய பொருட்களின் விலைகளில் இவ்வளவு மாற்றங்கள் ஏற்படப் போகின்றது என்பதை இந்தச் செயலமர்வில் கூடியிருப்பவர்கள் வீடுநோக்கிச் செல்லும் போது வாகனங்களுக்கு டீசல் நிரப்புகையில் கூடிய கட்டணத்தைச் செலுத்த நேரிடலாம்.

எமது அரசாங்கம் மானியங்களுக்கென்று

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்க்கட்சி கடுமையான கண்டனம்!

### மக்களை ஏமாற்றிவிட்டதாகவும் தெரிவிப்பு

மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதாகத் தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பொருட்களின் விலையை அதிகரிப்பதாக அறிவித்துள்ளமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் மானியங்களை நிறுத்துவதால் பொருட்களின் விலை அதிகரிக்கும் என்று நிதியமைச்சர் சரத் அமுனுகம விடுத்த அறிவிப்புத் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தமது கண்டனத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அனைத்துப் பொருட்களின் விலைகளையும் அதிகரித்து பொதுமக்களை விரட்டி விரட்டி தாக்குவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தபோது உலகசந்தையில் ஐக்கிய தேசியக் கட்சி தடைகளை ஏற்படுத்தியிருப்பதால் பொருட்களின் விலை அதிகரிப்பதாகக் கூறியிருந்தது.

உலகசந்தையில் பொருட்களின் விலை அதிகரிக்கின்ற வேளையில், இலங்கையிலும் பொருட்களின் விலையை அதிகரிக்கின்ற அரசாங்கம எமது பொதுமக்களுக்குத் தேவையில்லை.

அரசாங்கம் என்பது இலாபமீட்டும் நிறுவனமல்ல. நிவாரணங்களை வழங்கும் ஒரு அமைப்பாகும். எமது பொருளாதாரத்தை மிகவும் கீழே தள்ளிவிட்டு முழு நாட்டு மக்கள் மீதும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்பை மாற்றுவதற்கு

# ரணிலின் ஆதரவைப் பெற ஜனாதிபதி சந்திரிகா முடிவு!



## விரைவில் நேரடிப் பேச்சு!



(கொழும்பு)

**எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தி – நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை ஒழித்து மீளவும் நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்கும் வகையில் அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.**

இந்தோனேசியாவுக்குச் சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் ஜனாதிபதி சந்திரிகா தனது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளவுள்ளார்.

இதற்காக நாடு திரும்பியதும் தன்னைச் சந்திக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா - ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

இந்தச் சந்திப்பின்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்துவிட்டு, நாடாளுமன்ற ஆட்சிமுறையைக் கொண்டுவரும் வகையில், நடவடிக்கைகளை எடுப்பது குறித்தும், இதற்கு ஐ.தே.கவின் ஆதரவைப் பெறுவது குறித்தும் பேசப்படவிருக்கிறது.

அடுத்த வருடம் டிசம்பர் மாதத்துடன் ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக் காலம் முடிவடைவதால் அதற்கு முன்னர் ஐ.தே.கவின் ஆதரவுடன் அரசியலமைப்பில் மாற்றத்தைச் செய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாகவும், (14 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவைச் சேர்ந்த இருவர் சுட்டுக்கொலை!

### மட்டக்களப்பு - ஏறாவூரில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் - கிரான் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கருணா குழுவைச் சேர்ந்தவர்களெனச் சந்தேகிக்கப்படும் இரண்டு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர்களின் கைகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்ததாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தர்மசிறி ரத்நாயக்க தெரி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் படைச்சிப்பாய் புலிகளால் நேற்று விடுவிப்பு!

தமிழீழ காவல்துறையின் தடுப்புக் காவலில் கடந்த 19 ஆம் திகதியிலிருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் படைச்சிப்பாய் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

கேகாலை மாவட்டம் வரக்காப்பொலவைச் சேர்ந்த- சாலிய பிரதீபகுமார ஹெட்டியாராச்சி (வயது 29) என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புளியங்குள தடைமுகாமுக்குள் கடந்த மாதம் அத்துமீறிப் பிரவேசித்த இவரை விடுதலைப் புலிகள் கைதுசெய்து தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தங்காலை துப்பாக்கிச் சூட்டில் ஒரே குடும்பத்தவர் நால்வர் பலி

தங்காலை - வீரகெட்டிய விதா ரந்தனிய பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார்.

மரணச் சடங்கொன்றில் கலந்துகொள்ளச் சென்றவர்களே இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதாக தென்பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி.டபிள்யூ பிரதாபசிங்க தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே கொல்லப்பட்டனர்.

தனிப்பட்ட பகையே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு காரணம்.


துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர்கள் இராணுவச் சீருடையில் வந்திருந்ததாக தகவல் கிடைத்திருக்கிறது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மணல் ஏற்றிவந்த லொறி மோதி குடும்பஸ்தர் தலைசிதறிப் பலி!

### மந்திகையில் நேற்று துயரச் சம்பவம்



வடமராட்சி மந்திகை மடத்தடிச் சந்தியில் நேற்று இடம்பெற்ற சைக்கிள் - லொறி விபத்தில் சைக்கிளில் சென்றவர் தலைசிதறி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுப் பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் துயரச் சம்பவத்தில் காட்டுப்புலம் கரவெட்டியைச் சேர்ந்த செல்வன் - செல்வம் (குணம்) (வயது - 45) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

சிங்கநகர் - புலோலி தெற்கில் நடந்த மரணச் சடங்கொன்றில் கலந்துகொண்டுவிட்டு உறவினரின் சிறுமி ஒருவரையும் ஏற்றிக்கொணடு குறித்த நபர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார்.

அந்தவேளை பின்னால் மணல் (14 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

### நல்லூர் பிரதேசத்தில்

## 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது

நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட சில இடங்களில் நல்லூர் பிரதேசசபையினால் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் செயலாளர் வைரமுத்து தெரிவித்தார்.

நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட பல வீதிகளில் நீண்டகாலமாக மின் விளக்குகள் பொருத்தப்படாது இருப்பதால், பொதுமக்கள் இரவு நேரங்களில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்துள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டே நல்லூர் பிரதேசசபை தனது சொந்த நிதியில் இருந்தே, மின்சார சபையின் ஊடாக மின் விளக்குகளைப் பெற்றுப் பொருத்தியுள்ளது.

நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்ட வீதிகளான இராமலிங்கம் வீதிச் சந்தி, தலைமையலுவலக முன்பக்கம் திருநெல்வேலிச் சந்தையடி, முத்துத்தம்பி பாடசாலை வளைவு, கொக்குவில் இந்துமயானச்சந்தி, கொக்குவில் கொல்கள முன்பக்கம், கொக்குவில் உபஅலுவலக பின்பக்கம், கே.கே.எஸ் வீதி ஆடியபாதம் சந்தி, கொக்குவில் கே.கே.எஸ் வீதி பொதுச்சந்தையடி, கோண்டாவில் மருந்தகத்துக்கு முன்பக்கம் ஆகியவற்றிலேயே இந்த மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் செயலாளர் வைரமுத்து தெரிவித்தார்.

## யாழ்ப்பாண காப்புறுதி முகவர் அகில இலங்கையில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண முகவர் அ.சிவகாந்தா - 2003 ஆம் ஆண்டின் அகில இலங்கை ரீதியாக ஆயுள் காப்புறுதி முகவர்களில் முதன்மை இடத்தைப்பெற்றுள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற காப்புறுதிக் கூட்டுத்தாபன நிகழ்வொன்றில் வைத்தே இவர் கௌரவிக்கப்பட்டார்.

2002 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை ரீதியான ஆயுள் காப்புறுதி முதன்மை முகவர் என்ற விருதினையும் இவரே பெற்றுக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வலி.கிழக்கு பிரதேச முத்தமிழ் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச செயலக கலாசார பேரவையால் நடத்தப்படும் 2004 ஆம் ஆண்டுக்கான முத்தமிழ் விழா இன்று பிற்பகல் 1 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவையின் தலைவர் திருமதி ...த்தியசீலன் தலைமையில் நடைபெறும் இநதநிகழ்வில், பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தநிகழ்வில் - சிறப்பு விருந்தினராக முன்னாள் பிரதேச செயலர் கே.சத்தியசீலன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் இளைப்பாறிய பிரதம கணக்காளர் வி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (44)

### ஆசிரிய மாணவர்களுக்கு இறுதிப்பரட்சை

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை 2 ஆம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை 21 ஆம் திகதி முதல் 28 வரை நடைபெறவுள்ளது.

அதற்கான அனுமதி அட்டையினை எதிர்வரும் திங்கட்கிழமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும், இவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள் 16 ஆம் திகதி முதல் 19 வரை நடைபெறும் என்றும் அதிபர் கு. சதாசிவமூர்த்தி தெரிவித்தார்.

## பால் குளத்தின் அணை அகற்றியதால் சங்கரத்தை விவசாயிகள் பாதிப்பு!

சங்கரத்தை பால்குளத்தின் அணைக்கட்டுமண் சட்டவிரோதமாக அகழப்படுவதால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

50 ஏக்கர் வரை பயிர்ச்செய்கைக்குரிய மழைநீர் வெள்ளத்தைத் தேக்கி வைக்கக்கூடிய இந்தக்குளத்தின் அணைக்கட்டு 'அக்சன் பாம்' அரச சார்பற்ற நிறுவனத்தால் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இந்தக்குளத்தின் அணைக்கட்டின் மண் சட்டவிரோதமாக, இரவு வேளைகளில் உழவு இயந்திரம் மூலம் ஏற்றிச் செல்லப்படுகின்றது. இதனால், எதிர்வரும் மழைக்கால நீரை இந்தக் குளத்தில் சேமித்து வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

காலபோக பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கவுள்ள விவசாயிகள், இதனால் - தண்ணீர் பற்றாக்குறையை எதிர்நோக்குவதோடு, தமது விவசாய வருவாயும் பாதிக்கப்படவுள்ளதாகப் பெரும் கவலையும், அச்சமும் அடைந்துள்ளனர். (48)

## கால்வாய் நோயை கட்டுப்படுத்த சண்டிலிப்பாயில் தடுப்பூசி!

மாடுகளுக்குப் பரவிவரும் கால்வாய் நோயைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாடுகளுக்குத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, எதிர்வரும் 17 ஆம் திகதி கட்டுடை - இடிகுண்டடி வாசிக சாலையிலும், நவாலி தெற்கிலும் இந்தத் தடுப்பு மருந்துகள் ஏற்றப்படவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஆனைக்கோட்டைப் புகுதியிலும், 19 ஆம் திகதி நவாலி வடக்கு சனசமூகநிலையத்திலும், 20 ஆம் திகதி மானிப்பாய் திருவள்ளுவர் சனசமூக நிலையத்திலும் இந்தத் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

மாடு வளர்ப்போர் மேற்குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று தடுப்பூசிகளை ஏற்றமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (44)

## 49 ஆவது ஆண்டு நிறைவும் விளையாட்டுப் போட்டியும்!

(பருத்தித்துறை)

புலோலி வடமேற்கு அறிவகம் சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டுப்போட்டியும் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு புலோலி தெற்கு முருகையன் கோவிலடி மைதானத்தில், சனசமூக நிலையத்தின் தலைவர் சி.ரமணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில், பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை துணைப்பொறுப்பாளர் உமையகுமார், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவநேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(14)

## சுதர்சனின் 'மற்றுமொரு மாலை' கவிதைத் தொகுதி வெளியீடு!

சுதர்சன் எழுதிய 'மற்றுமொரு மாலை' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு, கண்டி டி.எஸ்.சேனநாயக்க வீதியிலுள்ள மகாகவி பாரதியார் அரங்கில் நடைபெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி.துரைமனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் - பேராசிரியர் க.அருணாசலம் பிரதம விருந்தினராகவும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைச் சேர்ந்த க.கனகேஸ்வரன், கேகாலை காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப்பதிவாளருமான க.தனபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

ஏகலைவன் பிரதம ஆசிரியர் சு.இ.முரளிதரன் வெளியீட்டுரையையும், அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் ஸ்ரீ.பிரசாந்தன் அறிமுகவுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் வ. மகேஸ்வரன் ஆய்வுரையையும் நிகழ்த்தவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது

### ஆங்கில தின நிகழ்வு

பிரிட்டிஷ் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கிலதின நிகழ்வு இன்று வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

### வில்லூன்றி தீர்த்தமும் அமாவாசை விழாவும்

வில்லூன்றி புனிததீர்த்தமும், ஆடி அமாவாசை விழாவும் நாளை காலை 6 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி மு.ப. 10 மணிவரை நடைபெறவுள்ளது.

### யாழ்.பல்கலையில் 'சுமைதாங்கி' தமிழ்திரைப்படம்

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் ஸ்ரீதரின் நெறிப்படுத்தலில் உருவான 'சுமைதாங்கி' என்னும் தமிழ்த் திரைப்பட வீடியோக் காட்சி காண்பிக்கப்படவுள்ளது.

படத்தின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராஜா தலைமையின் கீழ் படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் வருகைதந்து பயன்பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### ஆன்மீகச் சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பெரியாழ்வார் ஆசிரமத்தில்- பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்வில், நாளை காலை 10 மணிக்கு 'சீதையின் மகத்துவம்' என்னும் பொருள் பற்றி பருத்தித்துறை சாரதா தேவாசிரமத்தின் செயலாளர் சுவாமி சித்ரூபாணந்தா சொற்பொழிவாற்றவுள்ளார். (14)

### ஆடி அமாவாசை தீர்த்தத்திருவிழா

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவிலின் வருடாந்த ஆடி அமாவாசைத் தீர்த்தத் திருவிழா நாளை நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆலயத்தில் இருந்து சுவாமி ஊர்வலமாக திருவடி நிலைக் கடற்கரைக்கு எடுதத்துச் செல்லப்பட்டு, அங்கு தீர்த்தோற்சவம் நடைபெற்று, ஆடி அமாவாசைக் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (48)

## கிராமியத் தொழில் செய்வதற்கு சிகை ஒப்பனையாளருக்கு தடை!

(யாழ்ப்பாணம்)

சிகை ஒப்பனையாளர்கள் கிராமியத் தொழில் செய்வதற்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சிகை ஒப்பனையாளர்களுக்கு சில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதாக வெளியான செய்தி குறித்து யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சிகை ஒப்பனையாளர்களுக்கான சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன என்ற செய்திக்குறிப்பில், சில விபரங்களைத் தருகின்றோம். தடை செய்யப்பட்டிருந்த கிராமியத் தொழிலாளர்கள் தொழில் செய்வதற்கு புதிய நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது என்ற செய்தி முற்றிலும் தவறானது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். 30.07.2004 நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி கிராமியத் தொழில் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்பது தீர்மானமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SAAMSTECH இன்
இலவச ஆங்கில நேரடி வகுப்புகள

இடம் : ட்றிமர் மண்டபம் (Trimmer Hall)
யாழ்.மத்தியகல்லூரி அருகில்
காலம் : 15.08.2004 (ஞாயிறு) 16.08.2004 (திங்கள்)
ஆகிய திகதிகளில

- இதுவரை வகுப்புக்களில் கலந்துகொள்ளாதவர்களுக்கான முதலாவது வகுப்பு காலை 9-10, பிற்பகல் 2-3 பிற்பகல் 4-5 ஆகிய நேரங்களில் மேற்படி திகதிகளில் நடைபெறும்.
- யாழ்.பல்கலைக்கழகம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தாதியர் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, நெல்லியடி மத்திய மகாவித்தியாலம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, ட்றிமர் மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற்ற வகுப்புக்களில் கலந்து கொண்டோருக்கான இரண்டாவது நேரடி வகுப்புகள் முற்பகல் 11-12, பிற்பகல் 3-4, மாலை 5-6 ஆகிய நேரங்களில் மேற்படி திகதிகளில் நடைபெறும்.
- எமது மாணவர்களுக்கான 12, 13, 14, 15, 18 ஆம் புத்தகங்கள் கருத்தரங்கு நடைபெறும் இடங்களில் நேரடியாக வழங்கப்படும்.
- நேரடி வகுப்பில் கலந்துகொள்வோர்க்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள ஆங்கில மற்றும் சிங்கள 2 மாத நேரடி வகுப்புக்களில் 50% சலுகைக் கட்டணம் வழங்கப்படும்.

SAAMSTECH
Psalm Institute Of Engineering and Technology
22-1/4, Gall Road, Dehiwela.
T.P: 5540200, 0714 104100

யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன்
ஆங்கில மற்றும் சிங்கள நேரடி வகுப்பு

இன்று இலங்கையில் புதிய முறையிலான இலகுவான ஆங்கில வகுப்பினை 35,000 பேருக்கு மேல் வழங்கிய சாம்ஸ்டெக் நிறுவனத்தினால் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நேரடி ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

நீங்கள் விரும்பிய நாட்களில் காலை 8.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை உங்களுக்கு வசதியான நேரங்களில் வாரங்களில் மூன்று நாள் வீதம் தினமும் 2 மணிநேரம்.

(சனி, ஞாயிறு வகுப்புக்களும் உண்டு)
முழுமையாகக் கதைக்கலாம்.
பாடநெறியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ்

காலம் : 2 மாதங்கள்
கட்டணம் : ஆங்கிலம் 6,000/=, சிங்களம் 4,000/

SAAMSTECH
Psalm Institute of Engineering and Technology
22-1/4, Galle Road, Dehiwela,
5540200, 0714104100

குறிப்பு:
தேசிய ஆங்கில டிப்ளோமாவிற்கான அடுத்த தொகுதி பாடப் புத்தகங்கள் எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் ட்றிமர் மண்டபத்தில் விநியோகிக்கப்படவுள்ளது.

# இரண்டு சட்டமூலங்கள் அடுத்தவாரம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு

(கொழும்பு)

தேர்தலின்போது தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்குவது மற்றும் வெளிநாட்டவர்களுக்கு இந்த நாட்டில் சொத்துக்களை ஒப்படைக்கும்போது, வரி அறவிடுதல், ஆகியவை பற்றிய இரு சட்ட மூலகங்கள் - அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக, அரசாங்கக் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில், தேர்தல்களில் தேசிய அடையாளஅட்டை பயன்படுத்துவது தொடர்பாகவும், 20 ஆம் திகதி வெளிநாட்டவர்களுக்குச் சொத்துக்களை ஒப்படைக்கும் போது, வரி அறவிடுவது தொடர்பான சட்டமூலங்கள் இரண்டை விவாதத்துக் எடுத்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் கீதாஞ்சன் குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கூறிய அமைச்சர் இது குறித்து கலந்துரையாடுவதற்கு அடுதத செவ்வாய்க்கிழமை கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்தைக் கூட்டவுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும், இந்த இரண்டு சட்ட மூலங்களும், குறித்த நாடாளுமன்ற விவாதத்தைச் செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுக்கொண்டாலும், கட்டாயமாக 18, 19, 20 ஆகிய மூன்று தினங்களுக்குள் இந்தச் சட்ட மூலங்கள் இரண்டும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இதேவேளை - இந்தச் சட்டமூலங்கள் அடுத்தவாரம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துகொணட ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருஜெயசூரிய, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். (தே)

# ஜனாதிபதியின் குடும்பத்தின் மீது குற்றச்சாட்டைச் சுமத்தவில்லை!

## ராஜித சேனாரத்ன மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவோ அவரது மகனோ, அரசாங்கக் காணியைத் தகாதமுறையில் பெற்றுள்ளார்கள் என தான் ஒருபோதும் கூறவில்லை என நாடாளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைத் ஒருபோதும் சுமத்த வில்லை. கடந்த ஆட்சிக்காலத்தில் பிரதிக் காணி அமைச்சராகக் கடமையாற்றியபோது தகாதமுறையில் எந்தவித காணி சம்பந்தமான குழப்பங்களையும் மேற்கொள்ளவில்லை.

ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்கவும், அரசின் வணிக ரீதியான விலை மதிப்பீட்டின் அடிப்படையிலுமே காணிகள் பரிமாற்றம் செய்யப்பட்டன.

அதனால், எந்தவித சிக்கல்களும் காணி விடயத்தில் ஏற்பட்டிருக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளருக்கு முன்பிணை

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் விஜய ரணசிங்கவை கைதுசெய்ய முடியாதவாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இடைக்காலத் தடை உத்தரவொன்றைப் பிறப்பித்தது.

விஜயரணசிங்க தாக்கல் செய்திருந்த முன்பிணை மனுவை ஆராய்ந்த பின்னரே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இவர் தனது மனுவில் - தனிப்பட்ட வகையில் நான் இதில் சம்பந்தப்படவில்லை. எனக்குக் கீழ் பலர் பணிபுரிகின்றனர்.

எனவே, எனது நேரடியான கண்காணிப்பின் கீழ் இது நடந்ததென்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

அத்துடன், எனக்கு கீழ் பணிபுரிபவர்கள் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பின்னரே நான் கையெழுத்திடுவேன் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக குற்றத்தடுப்புப் பிரிவின் திணைக்களத்தின் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனுத் தொடர்பாகப் பிரதிவாதிகளின் காரணங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளுப்பிட்டிப் பொலிஸ்நிலையக் குண்டுவெடிப்பில் உயிரிழந்த பெண் உட்பட சிலருக்குத் தேசிய அடையாள அட்டை வழங்கியது தொடர்பாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை - இந்தப் போலி அடையாள அட்டைகள் வழங்கப்பட்டமை தொடர்பாக தேடப்பட்டு வரும் இரண்டு ஊழியர்கள் காணாமற் போயுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்கத் தூதரகம் திங்களன்று திறக்கப்படும்

'அந்திராக்ஸ்' பீதி காரணமாக கொழும்பிலுள்ள, இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் நேற்று நான்காவது நாளாக மூடப்பட்டிருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை தூதரக ஊழியர் ஒருவருக்குக் கடித மூலம் அந்திராக்ஸ் எனச் சந்தேகிக்கப்படும் வெண்ணிறத்தூள் அனுப்பப்பட்டதை அடுத்து, அமெரிக்கத் தூதரகம் இழுத்து மூடப்பட்டது.

நேற்றும் தூதரகம் மூடப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் கிறிஸ் லோங் கருத்துத் தெரிவிக்கையில்-

தூதரகத்துக்கு அனுப்பப்பட்ட தூள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. நாம் நிலைமையை ஆராய்ந்து வருகிறோம். எனினும், எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் தூதரகம் மீளத் திறக்கப்பட்டு, வழமைபோன்று செயற்பாடுகள் இடம்பெறும் எனத் தெரிவித்தார்.

# பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை மாணவரின் கல்வி வாய்ப்புக்குத் தடையாகவுள்ளது

## ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் மகாசிவம் தெரிவிப்பு

திருகோணமலை கல்வி வலயத்திலிருந்து, ஆசிரியர் வளங்கள் குறைந்த மூதூர் கல்வி வலயத்துக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்யவேண்டி ஏற்பட்டால், அந்த இடமாற்றத்துக்கு எமது சங்கம் நிறைந்த ஆதரவைத் தரும். இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட கல்வி அபிவிருத்தி மேம்பாட்டுப் பேரவையின் தொடக்க வைபவம் கடந்த புதன்கிழமை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது, வாழ்த்துரை வழங்கிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தொடர்ந்து உரையாற்றுகையில் -

திருகோணமலை மாவட்டத்தில் 3 கல்வி வலயங்களிலும் ஆசிரியர் பற்றாக்குறை அதிகமாகவே காணப்படுகின்றது. இவற்றில் மூதூர் வலயத்திலேயே பெருமளவான பற்றாக்குறை நிலவுகின்றது. இந்தப் பகுதி மாணவர்களின் கல்வி வாய்ப்புக்கு இது பெரும் தடையாக இருக்கின்றது. இந்தக் குறைபாடு நிவர்த்தி செயயப்பட வேண்டும், ஆசியர்களின் வளப்பகிர்வை மேற்கொள்வதன் மூலம், இந்தக்குறைபாடு தவிர்க்கப்பட்டுவிடும் என்றார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் அங்கு உரையாற்றுகையில்-

தமிழீழ விடுதலைப்புலிகள் உயர்ந்த இலட்சியத்தோடும், தியாகத்தோடும் பிறகால சந்ததியினரின் தேவை கருதி கல்வி, பொருளாதாரம், வீதி அபிவிருத்தி, சுகாதாரம் பற்றி எல்லாம் சிந்திக்கின்றனர். இவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அதிகாரிகள் போக்கு, மிகுந்த கவலையைத் தருகின்றது.

நாங்கள் பாடசாலைகளில் இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்துவதைக் காட்டிலும், வளங்கள் தேவைப் படுபவர்களாகவே இருக்கின்றோம். பாடசாலைகளில் வளங்கள் உச்சப் பயன்பாடு பெறப்படுவதில்லை.

வடக்கு - கிழக்கு பிரதேசம் கல்வியில் 15 வருடங்கள் பின் தங்கிய நிலையில் இருக்கின்றது. பின்தங்கிய கிராமங்களில் கல்வியில் சமவாய்ப்பு இன்மையே காணப்படுகின்றது.

ஆசிரியர்கள் மாற்றம் பெற வேண்டியவர்கள் என்ற எண்ணமின்றி செயற்படுகின்றார்கள். இதனால், ஆசிரியர் இடமாற்றங்கள் சரிவர நடைபெறாது காணப்படுகின்றது எனத் தெரிவித்தார். (04)

# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 98 பேரின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் என சந்தேகிக் கப்பட்டவர்களில் 98 மாணவர்களது பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக் கப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்தது.

இந்தப் பரீட்சை மோசடிகள் தொடர்பாக, கல்முனை மாவட்டத்திலிருந்து - 13, திருகோணமலை மாவட்டத்திலிலுருந்து - 11, கொழும்பு மாவட்டத்திலிருந்து 8, கண்டி - 32, மொனராகல, அம்பாறை, சிலாபம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் இருந்து தலா 6, காலியிலிருந்து 8 முறைப்பாடுகளும் கிடைத்தன.

இந்த அனைத்து முறைப்பாடுகளோடும் தொடர்புடைய பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதோடு, விசாரணைகள் முடிவடையும்வரை பெறுபேறுகள் வழங்கப்படமாட்டாதெனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஏ.எம்.விஜேசிறி தெரிவித்தார். (தே)

# சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

# மாகாணசபை உறுப்பினருக்கு விளக்கமறியல் உத்தரவு!

(கொழும்பு)

பருவமெய்தாத சிறுமிமீது பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட மேல்மாகாண சபை உறுப்பினர் துமிந்த சில்வாவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த மாதம் 23 அம் திகதிவரை இவரைத் தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் குசரா சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

டுமிந்த சில்வாவைப் பிணையில் விடுவிக்குமாறு அவரது சட்டத்தரணி கோரிய போதும் அதை நீதிபதி நிராகரித்தார்.

சிறுமியின் மருத்துவப் பரிசோதனையில், அவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனாலேயே துமிந்த சில்வாவை தடுப்புக்காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். எனினும், இந்தக் கைதினை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க வன்மையாகக் கண்டித்ததுடன் இது பொய்யான குற்றச்சாட்டு எனவும் தெரிவித்தார்.

# தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை திருமலையில் அங்குரார்ப்பணம்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை கடந்த புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.



படம் - சசிகுமார்

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ கல்விக் கழக உதவிப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், திருமலை மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கவயன்பன், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினரான துரைரட்ணசிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.


இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.


திருமலை மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவராக - முன்னாள் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புலேந்திரனும் வவுனியாக் கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி அழகரட்ணம் செயலாளராகவும், எழுத்தாளர் தேவகடாட்சம் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

மொத்தமாகக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் செயற்பாடுகளுக்காக 70 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (04),(10)

## இலங்கையுடனான டெஸ்ட்

# 189 ஓட்டங்களுக்குள் சுருண்ட தென்னாபிரிக்கா நெருக்கடியில்







(கொழும்பு)

இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று, தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 189 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து நெருக்கடிக்குள்ளான நிலையில் உள்ளது.

முதல் இனிங்ஸில் இலங்கை அணி 470 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்த நிலையில், தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் துடுப்பெடுத்தாடியிருந்தது.

3 விக்கெட் இழப்புக்கு 116 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்று ஆட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, 140 ஓட்டங்களை எடுத்திருந்தபோது சிமித் ஆட்டமிழந்தார்.

65 ஓட்டங்களை 125 பந்துகளில் இவர் எடுத்தார். அடுத்து கலிஸ் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

இதன்பின்னர் றுடோல்ப் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். தென்னாபிரிக்க அணி 186 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் டிப்பென்னரின் விக்கெட் வீழ்ந்தது.

இதையடுத்து 189 ஓட்டங்கள் எடுப்பதற்குள் பொலக், என்ரினி, ஹெய்வாட் ஆகியோர் ஆட்டமிழந்து சென்றனர்.

இதனால் முதல் இனிங்ஸில் 189 ஓட்டங்களை மட்டுமே தென்னாபிரிக்க அணியால் பெறமுடிந்தது.

ஜெயசூர்யா பந்துவீச்சில் 5 விக்கெட்டுக்களையும், ஹேரத் 3 விக்கெட்டுக்களையும், மாலிங்க, வாஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் நேற்றுத் துடுப்பெடுத்தாடியது. அத்தப்பத்து 72 ஓட்டங்களுடனும், ஜெயசூர்யா 19 ஓட்டங்களுடனும், சங்ககார 64 ஓட்டங்களுடனும், ஜெயவர்த்தன 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

சமரவீர 21 ஓட்டங்களுடனும், டில்ஷான் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் நேற்றைய ஆட்டம் நிறைவடைந்தது.

ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 4 விக்கெட் இழப்புக்கு 211 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இலங்கை அணி தற்போது 492 ஓட்டங்கள் முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

### முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

கல்வியங்காடு புதிய செம்மணி வீதி ஞானஒளி முன்பள்ளி விளையாட்டுவிழா, நாளை பிற்பகல் 2.30 மணிக்கு ஞானஒளி சனசமூக தலைவர் ரி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. (31)

### கடலக விளையாட்டுப்போட்டி

கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா திருவிழாவைபொட்டி சென் மேரிஸ் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க ஆதரவில் கடலக விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

காலையில் கடலில் ஆண்களுக்கான நீச்சல் போட்டி, 15 குதிரை வலு, 8 குதிரை வலு கொண்ட வெளியிணைப்பு இயந்திர படகோட்டப் போட்டிகளும் மாலையில் பெண்களுக்கான 5 கி.மீ மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது. (21)





## ஒலிம்பிக் உதைபந்தாட்டம் —

# வலுவான போர்த்துக்கலை ஈராக் அணி தோற்கடித்தது!



ஒலிம்பிக் தகுதிச் சுற்று உதைபந்தாட்டப் போட்டிகளில் - ஈராக் அணி 4-2 என்ற அடிப்படையில் வலுவான போர்த்துக்கல் அணியைத் தோற்கடித்து உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

கடந்த புதன்கிழமை உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகின. நேற்றுமுன்தினம் நான்கு ஆட்டங்கள் இடம்பெற்றன. இவற்றில் முதலாவது ஆட்டம் 'டி' பிரிவில் ஈராக் மற்றும் வலுவான போர்த்துக்கல் அணிகளுக்கிடையில் நடைபெற்றது.



முதல் பாதி ஆட்டத்தில் ஈராக் வீரர்கள் முன்னிலை வகித்தபோதும் ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் ஈராக்கிய வீரர் ஹைதர் ஜாபர் எதிரணிக்கு கோல் ஒன்றை அடித்துக் கொடுத்தார்.

இதனால் போர்த்துக்கல் அணி முன்னிலை பெற்றிருந்தபோதும், அடுத்த மூன்றாவது நிமிடமே - ஈராக்கிய வீரர் இமாத் முகமட் தமது அணிக்காக ஒரு கோலை அடித்து சமநிலைப் படுத்தினார்.

இதன் பின்னர் 29 ஆவது நிமிடத்தில் முல்லா மொகமட் இன்னொரு கோலை அடித்து முதல்பாதி ஆட்டத்தில் ஈராக் அணியை 2-1 என்ற அடிப்படையில் முன்னிலை பெறவைத்தார்.


இரண்டாவது பாதி ஆட்டத்தில் யூனுஸ் மொகமட், சாலியா சாதிர் ஆகிய வீரர்கள் இரண்டு கோல்களை அடித்து ஈராக் அணியை 4-2 என்ற அடிப்படையில் வெற்றிபெற வைத்தனர்.

இதேவேளை, இன்னொரு ஆட்டத்தில் இத்தாலி அணி முதல் பாதி ஆட்டத்தில் 2-0 என்ற அடிப்படையில் இருந்தபோதும், இரண்டாவது பாதி ஆட்டத்தில் சரியாக விளையாடாததால் கானா அணி சமன்செய்தது.

'பி' பிரிவில் பரகுவே - ஜப்பான் அணிகள் மோதின. இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடின. பரகுவே 4-3 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதேவேளை 'டி' பிரிவில் கோஸ்ராரிக்கா மற்றும் மொராக்கோ அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் எந்த அணியும் கோல் அடிக்காததால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

# ஐ.சி.சி போட்டியிலும் பிறைன் லாறாவே கப்டன்!



ஜேக்கப்

செப்ரெம்பர் மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி சம்பியன் கிண்ணப் போட்டிக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் லாறா மீண்டும் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அந்த அணியின் விக்கெட் கீப்பர் ஜேக்கப் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக பிரவுன் விக்கெட் கீப்பராக சேர்க்கப்பட்டுள்ளார்.

அந்த அணி விபரம் வருமாறு -

லாறா (கப்டன்), ஹின்ட்ஸ், கைல், சர்வான், சந்தர்போல், சிமித், பிராவோ, பவல், பிரவுன், ஜோசப், டிலான், கொலிமோர், பிராட்ஷா, லோசன்.




## உள்ளூராட்சி வார கிரிக்கெட்

# மானிப்பாய் பிரதேசசபை அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது

(மானிப்பாய்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்படும் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான 15 ஓவர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் -

மானிப்பாய் பிரதேசசபையின் அணிக்கும் சுன்னாகம் பிரதேசசபை அணிக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் - மானிப்பாய் பிரதேசசபை அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சுன்னாகம் பிரதேசசபை அணியினர் விக்கெட்டுக்களை சடுதியாக இழந்தனர். இதனால் 15 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து சுன்னாகம் பிரதேசசபை அணி 75 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெய்சங்கர் 18 ஓட்டங்களையும், டலிகன் 13 ஓட்டங்களையும் தமது அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் அணி சார்பில் நித்திலவர்ணன் 3 விக்கெட்டுக்களையும், கமலகாந் 2 விக்கெட்டுக்களையும், அகிலன், சிவசுதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

76 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மானிப்பாய் பிரதேசசபை அணியினர் 13 ஆவது ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தனர்.

பூ.ஜெயக்குமார் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும், பிரான்சிஸ் ஆட்டமிழக்காமல் 7 ஓட்டங்களையும் பெற்றனர். அகிலன் 22, லக்ஷ்மன் 16, சிவசுதன் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கஜேந்திரன், ஜெய்சங்கர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இறுதியில், மானிப்பாய் பிரதேசசபை அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. (100)

# இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட்; மேற்கிந்தியத்தீவுகள் அணி 6/275



(லண்டன்)


இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணி - இங்கிலாந்து அணியுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் 6 விக்கெட்டுக் இழப்புக்கு 275 ஓட்டங்களைக் குவித்தது.

நேற்றுமுன்தினம் ஓவ்ல்ட்ரபோட் மைதானத்தில் ஆரம்பமான போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கைல் 5 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் ஜோசப்புடன் சர்வான் இணைந்து நிலைத்து நின்று ஆடினார்.

அணி 85 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சர்வான் 40 ஓட்டங்களுக்கு பிளின்ரொப்பின் பந்துவீச்சில் போல்டானார்.





3 ஆவது விக்கெட்டுக்கு ஜோசப்புடன் ஜோடிசேர்ந்த அணித்தலைவர் லாரா ஓட்டமெதையும் பெறாமலே பிளின்ரொப்பின் பந்துவீச்சுக்கு போல்டானார்.

இதனால் நெருக்கடிக்குள் சிக்கியிருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு சந்தர்போல் கைகொடுத்தார். அவர் ஜோசப்புடன் இணைந்து ஆட்டத்தைத் தொடர ஜோசப் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

இதையடுத்து பிராவோ - சந்தர்போல் ஜோடி இணைந்து நிலைத்து நின்று விளையாடி 157 ஓட்டங்களைக் குவித்தது. எனினும் பிராவோவும், சந்தர்போலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

பிராவோ 77 ஓட்டங்களுடனும், சந்தர்போல் 76 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

முதலாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 விக்கெட் இழப்புக்கு 275 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

போ 9 ஓட்டங்களுடனும், மொகமட் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் ஹோகாட் 3, பிளின்ரொப் 2, ஹர்மிசன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# சர்வதேச போட்டிகளிலிருந்து சிடோனே ஓய்வுபெற்றார்!



(பாரிஸ்)

பிரான்ஸ் உதைபந்தாட்ட அணியின் முன்னனி சிடோனே ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். பிரான்ஸ் உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரராகத் திகழ்ந்தவர் சிடோனே. உதைபந்தாட்ட கதாநாயகர்களில் ஒருவராக விளங்கிய இவர் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக நேற்று அறிவித்தார். ஆடடத்தை நிறுத்த சரியான தருணம் என்பதால் இந்தக் கடினமான முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

32 வயதான சிடோனே 93 சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில் 7 ஆட்டங்கள் தவிர அனைத்திலும் அவரது அணி வெற்றிபெற்றுள்ளது. 11 போட்டிகளில் கப்டனாக இருந்துள்ளார். சர்வதேச போட்டிகளில் மொத்தம் 26 கோல்களை அடித்துள்ளார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### தீபஜோதி சனசமூக நிலைய 30ஆவது ஆண்டு நினைவு விழா

கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் யோ.சுரேஷ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ். வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

### 5 லட்சம் ரூபா செலவில் மணிக்கூட்டு கோபுரம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு அம்பன் பெரியம்மான் விநாயகர் ஆலயத்துக்கு சுமார் 5 லட்சம் ரூபா செலவில் மணிக்கூட்டுக்கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது.

டென்மார்க்கில் வசித்து வரும் அம்பனைச் சேர்ந்த பொன்னையா பரமேஸ்வரன் என்பவர் இதற்கான நிதி உதவியை வழங்கியுள்ளார். (14)

### மைதானத்துக்கு காணி கொள்வனவு

மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலய விளையாட்டு மைதானத்துக்கென 30 பரப்பு காணி கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதற்கான நிதி உதவியை வெளிநாடுகளில் வசித்து வரும் இந்தப் பிரதேச மக்கள் வழங்கியுள்ளனர். (14)

### வருடாந்த மஹோற்சவம்

(வடமராட்சி)

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இன்று காலை 10.45 மணிக்கு இரதோற்சவமும் நாளை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (14)

### பருத்தித்துறை - முகமாலை பஸ்சேவை நீடிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - முகமாலை பஸ் சேவைகள் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்களின் நன்மை கருதி இந்தச் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 5.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை அரை மணித்தியாலத்துக்கு ஒரு பஸ் வீதம் சேவையிலீடுபடுத்தப்பட்டு வருகின்றன. அதேவேளை, முகமாலையிலிருந்து கடைசி பஸ் வண்டி பிற்பகல் 5.30 மணிக்குப் புறப்படுவதாகவும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (14)

### பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் தலைவர் நடராஜ சுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (14)

### எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

(நெடுந்தீவு)

தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தின் உறுப்பினர்கள் நெடுந்தீவுப் பிரதேசத்தில் எயிட்ஸ் தொற்று நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை கடந்த சில நாட்களாக நடத்தி வருகின்றனர்.

அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் பாடசாலைகளுக்குச் சென்று கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை, நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை பாலர் பகற் பராமரிப்பு நிலைய சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# வீரத்தை வெளிக்கொணர்வதில் வல்வெட்டித்துறை முன்னணியில்!

## விளையாட்டு விழாவில் பேராசிரியர் மோகனதாஸ்

யாழ். குடாநாட்டில் விளையாட்டுக்கும், வீரத்துக்கும் அன்றும் இன்றும் பெயர்பெற்ற இடமாக வல்வெட்டித்துறை விளங்குகிறது. வீரத்தை வெளிக்கொணர்வதில் வல்வெட்டித்துறை முன்னணி வகிக்கிறது.

இவ்வாறு வல்வெட்டித்துறை நெடியகாடு விளையாட்டு கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு, நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிவரும் நெடியகாடு விளையாட்டு கழகம் 50ஆம் ஆண்டு விழாவை கொண்டாடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

எமது பிரதேசத்தின் பாரம்பரியங்களை பாதுகாக்கக்கூடியவாறு இங்கு நடைபெற்ற போட்டிகள் விளங்குகின்றன. குறிப்பாக கடலில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் தனித்துவம் வாய்ந்ததாக உள்ளன.

இங்கு நடைபெற்ற போட்டிகளில் ஆண்களும், பெண்களும் சரிசமமாக உற்சாகமாகப் பங்குபற்றி சுறுசுறுப்புடன் இருந்ததை காணும் போது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது.

மனித வளங்கள், சூழல்கள் பாதுகாக்கப்படுவதுடன் கடல் வளமும் பாதுகாக்கப்படவேண்டும். வல்வெட்டித்துறையில் நல்ல தலைவர்கள், முன்னோடிகள் இருந்துள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் வீரதீரம் உள்ளவர்களாகவும், சிறந்தகருத்துக்களை கூறுபவர்களாகவும், விவேகிகளாகவும் இருந்து வந்துள்ளவர்கள்.

எமது பிரதேச கல்வி, விளையாட்டு அபிவிருத்தியில் நாம் அனைவரும் பங்குபற்றி அவற்றின் அபிவிருத்திக்கும் பாடுபடவேண்டும் என்றார்.

அடுத்துபேசிய யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் -

இன்றைய சூழ்நிலையில் விளையாட்டுப் போட்டிகள் பல இடங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சமாதானம் நிலவும் இன்றைய சூழ்நிலையில் நாம் விளையாட்டுதுறையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

விளையாட்டுக்கள் விளையாட்டாக இருக்கவேண்டும். விளையாட்டுத்துறையில் முன்னேறி நாம் சிறந்த வீரர்களை உருவாக்கவேண்டும். இந்த விளையாட்டு மைதானத்தை விஸ்தரிக்கவும் வளப்படுத்தவும் போதிய உதவிகளை செய்து தருவேன் எனத்தெரிவித்தார். (17)

# "அரிசி எமது வாழ்க்கையாகும்" சுவரொட்டிச் சித்திரப்போட்டி

ஐக்கிய நாடுகளால் இந்த ஆண்டு சர்வதேச அரிசி ஆண்டாக் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு இலங்கை ஐக்கிய நாடுகளது நட்புறவுச் சங்கம் 'அரிசி எமது வாழ்க்கையாகும்' என்ற கருப்பொருளில் சுவரெட்டி சித்திரப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இப்போட்டி, திறந்த போட்டி, பாடசாலை மாணவர்களுக்கான போட்டி என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது

இந்த மாதம் 31ஆம் திகதியன்று பதினெட்டு வயதுக்கு குறைந்த பாடசாலை மாணவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

அவர்களது ஆக்கத்தின் பின்புறம் பிறந்த திகதி குறிப்பிடப்பட்டு பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவேண்டும்.

40x50 சென்ரிமீற்றர் அளவிலான எந்தக் கடதாசியையும், எந்த வரைபு வகைகளையும் பாவிக்கலாம் எனவும், ஒவ்வொரு படைப்பாளிகளும், தமது ஆக்கத்தின் பின்புறம், முழுப்பெயர், முகவரி, வயது, பிறந்ததிகதி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு, கையொப்பமும் இடப்பட்டிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்கு பணப்பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படவுள்ளன. பரிசில் வழங்கும் நிகழ்வுகள் செப்ரெம்பர் 11 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் கலந்து கொள்வோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பாக இலங்கை ஐக்கிய நாடுகள் நட்புறவுச் சங்கம், சன்போ இல்லம், இல. 658/83 மஹாவில கார்டன்ஸ் பேஸ்லைன் வீதி, கொழும்பு - 09 என்ற முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (31)

### 25 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள பரீட்சைக்கு, நெடுந்தீவு கரமத்தை கந்தன் இந்து அறநெறிப் பாடசாலையிலிருந்து சுமார் 25 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதேவேளை, கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இந்தப் பரீட்சைக்கு கந்தன் அறநெறிப் பாடசாலையிலிருந்து தோற்றிய 6 மாணவர்களும் விசேட சித்திகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (113)

# யாழ். பிரதம தபாலகத்தை திறக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, இதுவரை திறக்கப்படாது இருக்கும் யாழ். பிரதம தபாலகத்தை உடன் திறப்பதுடன், தேவையான புதிய தளபாடங்களை கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுத்து உதவும்படி, தபால் மா அதிபரை யாழ் பிரதம தபாலக அபிவிருத்தி ஆணைக்குழு கோரியுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதம தபாலக வடபிராந்திய பிரதித் தபால்மா அதிபர் அலுவலகம், யாழ் பிரதம அஞ்சல் அலுவலகம், வடபிராந்திய கணக்காளர் அலுவலகம், யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகம், வடபிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகம் என்பன இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது இந்த அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (31)

# யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்திலிருந்து ஜனாதிபதி சந்திரிகாவின் படத்தை அகற்றவும்

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை

எமது மக்களின் மீது பல்வேறுபட்ட அடக்கு முறைகளைத் திணித்த, திணிக்க முற்பட்டுக் கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உருவப்படத்தைப் பல்கலைக்கழக சபா மண்டபத்தில் இருந்து உடனடியாக அகற்ற வேண்டும் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் துணைவேந்தரிடம் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக ஒன்றியத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எமது தமிழினம் சமாதானத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைச் சீரழித்துக் கொண்டிருக்கும் சந்திரிகா எம்மீது மீண்டும் ஓர் யுத்தத்தைத் திணித்து எமது தமிழினத்தை அழிக்க முற்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்பது யாவரும் அறிந்த உண்மை. சமாதானம் என்ற போர்வையில் இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் ஒப்பந்தங்களைச் செய்து இராணுவ ரீதியாகத் தம்மைப் பலப்படுத்திக்கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்தைத் தமிழ் மக்கள் மீது திணிக்க முற்படுகின்றார்.

எமது இனத்தின் மீது அக்கறையில்லாத, எமது இனத்தை அழிக்கவேண்டும் என்ற இன வெறியோடு ஆட்சிப்பீடத்தில் இருக்கும் சந்திரிகாவின் உருவப்படம் எமது பல்கலைக்கழகத்தில் இருப்பதற்கு எந்தத் தகுதியும் அற்றது. 1994 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை எமது மண்ணும் மக்களும் பட்ட துன்ப துயரங்களுக்கெல்லாம் காரணமானவரும் சந்திரிகாவேதான்.

எமது பல்கலைக்கழகம் எமது மக்களுக்காகவும், மக்களின் விடுதலைக்காகவும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்ற சிங்கள இன வெறி அரசுக்கு அடிபணியாத உயர் கல்வி நிறுவனம். எனவே இவ்வாறான ஒரு இடத்தில் எம் மண்ணை அழித்த அரக்கத்தனமானவர்களின் படத்தை வைத்துப் பூசித்துக் கொண்டிருக்க நாம் தயாராக வில்லை. பாடசாலைச் சீருடைகளுடன் நாம் பள்ளியில் படித்த போது, எமது உறவுகள் பலரின் உயிர்களைச் சீருடையோடு பறித்துச்சென்ற இந்த அம்மையாரின் படத்தை எம்மால் பார்த்துக்கொண்டு தொடர்ந்தும் கல்வி கற்க முடியவில்லை. எனவே, உடனடியாக சந்திரிகாவின் படத்தை அகற்றிவிடுமாறு தங்களிடம் கோரி நிற்கின்றோம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

### தொலைத் தொடர்பு கோபுரம் அமைப்பு

டயலொக் நிறுவனம் தமது சேவைகளை விரிவுபடுத்தும் முகமாக வடமராட்சி, கோப்பாய் ஆகிய இரு பகுதிகளிலும் தொலைத் தொடர்பு கோபுரத்தை அமைத்து வருகின்றது.

வடமராட்சியில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலும் கோப்பாயில் மானிப்பாய் வீதியிலும், கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறையிலுள்ள கோபுரத்தின் ஊடாக வடமராட்சியில் உள்ள அனைத்து பிரதேசங்களிலிருந்தும் தமது சேவைகளை பெறக்கூடியதாக இருக்கும் எனவும் இந்தக் கோபுரங்களின் ஊடாக பயன்பாடுகளை இந்த மாதம் பெறக்கூடியதாக இருக்கும் எனவும் அங்கு பணிபுரியும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (20)

### சமுர்த்தி வங்கி திருட்டு கண்டுபிடிப்பு

(ஊர்காவற்றுறை)

அண்மையில் ஊர்காவற்றுறை சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் திருடப்பட்ட பொருட்கள் நாரந்தனை சீர்திருத்த குழுவினால் கடந்த திங்கட்கிழமையன்று கண்டுபிடிக்கப்பட்டு நாரந்தனை தேசிய எழுச்சிப் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களின் மண்ணெண்ணை அடுப்பு, கணினி, இறப்பர் முத்திரை என்பன அடங்கும். (51)

## சின்னஞ் சிறு செய்திகள்

### இளைஞர் குழுக்களிடையே மோதல்

நல்லூர் சட்டநாதர் வீதியில் ஆலயத்துக்கு அண்மையில் இரண்டு குழுக்களுக் கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் ஒருவர் சிறு காயங்களுக்குள்ளானார். (63)

### கட்டைக்காடு கடற்கரைவீதி திருத்தப்படவுள்ளது

கட்டைக்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற்கரைவீதி திருத்தி அமைக்கும் வேலை விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறது.

ஜீரி.இசற் நிறுவனம் இந்த வீதிக்கு களிமண், ஊரிபோட்டுத் திருத்தம் செய்வதற்கு முப்பத்தைந்து இலட்சம் ரூபாவை வழங்கவிருக்கிறது. (21)

### நகர, பிரதேச சபை தலைவர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

நகர சபை மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றின் தலைவர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாகாணசபை, உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் -மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ஜயதிஸ்ஸ ரணவீர, நகரசபைகளின் சமாசத் தலைவரும், கேகாலை நகர சபை தலைவருமான ஜட்கேந்த பெரேரா, உள்ளூராட்சி சிரேஷ்ட உதவிச் செயலாளர் டி.பி. ஹெட்டி ஆராச்சி, மேலதிக செயலாளர் எல்.எஸ். பெர்னாண்டோ உட்பட பலர் உரையாற்றவுள்ளனர். (29)

### நூலகர்களுக்கு பயிற்சி வகுப்பு

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைக்குட்பட்ட நூலகங்களில பணியாற்றும் நூலகர்களுக்கான பயிற்சி வகுப்பொன்று எதிர்வரும் 27ஆம் திகதி முதல் நான்கு நாட்களுக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இருபகுதிகளாக நடைபெறவுள்ள இந்தப்பயிற்சி வகுப்புக்களில் அனைத்து நூலகர்களையும் பங்கு கொள்ளுமாறு உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டுள்ளார். (100)

### கள்ளின் விலை 3 ரூபாவால் அதிகரிப்பு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் பனம் கள்ளின் விலை கடந்த முதலாம் திகதி தொடக்கம் போத்தல் ஒன்றுக்கு மூன்று ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பணிமனையில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் மாதாந்தக் கலந்துரையாடலில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் 17 ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்த ஒரு போத்தல் பனம் கள் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் 20 ரூபாவுக்கு விற்கப்பட்டு வருகிறது.

பனம் கள் சீசன் குறைந்து வருவதே இதற்கு காரணம் என பனம் கள் விற்பனையாளர் ஒருவர் தெரிவித்தார். (14)

### உதவி தேர்தல் ஆணையாளராக குகநாதன் நியமனம்

யாழ். செயலக உதவி தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றும் எஸ். நடராஜா ஒக்ரோபர் மாதம் ஓய்வு பெறவுள்ள போதும் அவரது உடல் நிலை காரணமாக தற்போது மருத்துவ விடுமுறையில் செல்லவுள்ளார்.

இதனால், இவரது இடத்துக்கு இ.குகநாதன் என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (தீ)

### எழுச்சிப் பேரவையின் சங்கமம் நிகழ்வு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையின் தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கமம் நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதியன்று சின்னமடு பொது மண்டபத்தில் நடைபெறுமென ஊர்காவற்றுறை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் தெரிவித்தார். (51)

# மாவைக் கந்தன் தேரேறும் மகத்தான திருநாள்

வாயு தேவனால் பொன் மலையாகி மகா மேருவினின்றும் பறித்தெறியப்பட்ட சிகரங்களுள் ஒன்று ஈழநாடு எனப்படுகிறது. ஈழம் - பொன், பல வளம் நிறைந்த ஈழம் எனப்படும். இலங்கை கந்தபுராணம், இராமாயாணம், பாரதமாகிய புராண இதிகாசங்களால் புகழ்ந்துரைக்கப்படுகிறது. அது குபேரன், இராவணன், விபீஷணன் ஆகியோரால் ஆளப்பட்டது. சைவமும் தமிழும் தனி நடமாடுதற் இடமாயது. தேவாரப்பதிகப் பாடல பெற்ற திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருப்புகழ் பாடல் பெற்ற கதிரமலை ஆகிய தொன்மை நலம் வாய்ந்த திருத்தலங்களைத் தன்னகத்தே கொண்டது.

இலங்கையின் சிகர மெனச் சிறந்தது அதன் வடபாலுள்ள யாழ்ப்பாண மென்னும் திவ்விய நகர், அந்த நகரின் வடபால் கடல்மருங்கில் 'கணடகி' என்னும் புனித தீர்த்தம் உளளது. அது இன்று கீரிமலை [illegible] வழங்கப்படுகிறது. அதில் நீராடி உடலுயிர்ப் பிணிகள் நீங்கினோர் பலர் என்பது வரலாறு.

கீரிமுகமுடைமையால் நகுல முனிவர் எனப்படும் முனிசிரேட்டர் ஒருவர் அந்தத் தீர்த்ததில் நீராடி அதன் மருங்கில் கோவில் கொண்டருளிய திருத்தம்பலேஸ்வரி சமேத திருத்தம்பலேஸ்வரப் பெருமானை வழிபட்டுத் தமது கீரிமுகம் மாறப் பெற்றார் என்பது வரலாறுகளில் ஒன்று கீரிமலை என்னும் பெயருக்குக் காரணம் இந்த நிகழ்ச்சியே என்பது வழக்கு. அம்முனிவராற் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தியே நகுலேஸ்வரப் பெருமான் என்பர்.

திருத்தம்பலேஸ்வரம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட் டது. இப்போதுள்ள சிவாலயம் நல்லை நாவலர் பெருமான் கருத்தின்படி இற்றைக்கு நூறு வருடங்களின் முன் அமைக்கப்பட்டது.

குன்மநோயும், குதிரை முகமும் கொண்டவளாகிய திசையுக்கிர சோழனின் மகள் மாருதப் பூரவீகவல்லி என்னும் அரசிளங்கன்னி சோழநாட்டினின்றும் இங்கு வந்து தங்கி தீர்த்தமாடிச் சிவாலயதரிசனம் செய்யும் நியமம் பூண்டு, அதன் பயனாக நோயும் நீங்கி, முகமும் மாறப் பெற்றாள் என்பது மற்றோர் வரலாறு.

அவள் தங்கியிருந்த இடம் குமாரத்தி பள்ளம். என்றும் இன்றும் வழங்கப் படுகின்றது. அவள் அரசிளங் குமாரியாதலில் தான் சேமமாக வாழ ஓர் அரண்மனை அமைத் திருந் தாளென்றும், அந்த அரண் மனைக்கருகே அவள் தோண்டுவித்த தடாகமே மகா ஔதாரியப் பிரபுவாகிய திரு சர.சிவானந்த பிள்ளை அவர்களின் வீட்டின் கீழ் பால் தூர்ந்த நிலையில் இன்றும் காணப்படும் தடாகம் என்றும் கூறுவர். எவ்விடத்தில் அவளது குதிரைமுகம் மாறியதோ அந்த இடம் மாவிட்டபுரம், என வழங்கப்படுகின்றது.

(மா - குதிரை, இங்கே அது குதிரை முகத்தை உணர்த்துகிறது. விட்ட - நீங்கிய, புரம் - நகரம்)

இளமை, எழில், நலம் தனக்கு வாய்த்த போது அவளுக்கு அந்த நலம் என்றும் அமைந்த முருகப் பெருமானின் எண்ணம் வந்தது போலும் அதனால் முகம் மாறிய அந்த இடத்தில் முருகனுக்கு ஆலயம் எடுக்கக் கருதி அந்தக் கருத்தைத் தன் தந்தைக்குத் தெரிவிக்க அவன் மகிழ்ந்து ஆலய அமைப்புக்கு வேண்டிய யாவற்றையும், விக்கிரகங்களையும், தொழிலாளர்களோடும், சிதம்பரம் தீட்சிதர்களாகிய பெரிய மனத்துள்ளார், சின்ன மனத்துள்ளார் என்னும் அந்தணப் பெரியார்களோடும் அனுப்பி வைத்தனன், ஆலயம் சிவாகம முறைப்படி அமைக்கப்பட்டது. அவளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தியே இன்றும் நாம் வழிபாடு செய்யும் மூர்த்தியாகும் அன்றிலிருந்து சிவாகம முறைப்படி நித்திய பூஜைகளும், வெள்ளிக்கிழமை, கார்த்திகை நட்சத்திரம் பொருந்திய நாள் ஆகிய காலங்களில் விசேட பூஜைகளும் வருடந்தோறும் ஆடி அமாவாசையன்று 25 ம் திருவிழாவாகிய தீர்த்தத் திருவிழாவும், அதற்கு முதல் நாள் தேர்த்திரு விழாவும் அமைய 25 திருவி ழாக்களும் ஒழுங்காக நடை பெற்று வருவது சைவமர பாகப் பேணப்பட்டு வந்திருக்கிறது.

தீர்த்தத் திருவிழாவுக்கு முருகப் பெருமான் கீரிமலையிலுள்ள கண்டகி தீர்த்தத்திற்கு எழுந்தருள்வார். கலியுகவரதனாகிய மாவைக் கந்தப் பெருமான் அடியவர்களுக்கு இன்னருள் புரிந்து அவர்களை இரட்சித்து வருகின்றார்.

இத்தகு வரலாற்றுப் பெருமைகளோடு ஈழத்தின் வடபால்பண்டு தொட்டு பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வாழ்வு கேட்டு வருகின்ற அபிஷேகக் கந்தனாக விளங்குகின்ற மாவைக்கந்தனின் தேர்த்திருவிழா திருநாள் இன்றாகும்.


நமது ஈழநாடு தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழின்

**கிளிநொச்சிப் பணிமனை தன் சேவையை ஆரம்பித்துள்ளது**

வாசகர்களே... வர்த்தகப் பெருமக்களே... படைப்பாளிகளே மற்றும் பல்துறை சார்ந்த அமைப்புக்களே...

உங்கள்

செய்திகள் - விளம்பரங்கள் - அறிவித்தல்கள் மற்றும் விநியோகம் தொடர்பான அனைத்திற்கும் ஏனைய தொடர்புகளுக்கும்...

**ஏ-9 நெடுஞ்சாலை, கிளிநொச்சி**


## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுச் செய்தி

**கீழே குறிப்பிட்டுள்ள பெயருடையவர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.**

அலுவலக நேரம் :- திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 8.00 மணி தொடக்கம் 5.00 மணி

(விடுமுறை நாட்கள் தவிர)

| | |
|---|---|
| செல்வரத்தினம் மேரி அஜந்தா | கடற்கரை வீதி, பருத்தித்துறை |
| த.சுந்தரலிங்கம் | ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை |
| குணசிங்கம் அருள்மொழி | மே/பா. சோமசுந்தரம் மங்களேஸ்வரி, V.M. வீதி, பருத்தித்துறை. |
| ரத்தினவடிவேல் ராமநாதன் | நெடியகாடு, வல்வெட்டித்துறை |
| பழனியாண்டி பாலேஸ்வரன் | புது வீதி, வல்வெட்டித்துறை |
| உதயகுமார் சந்திரவதனி | கற்கோவளம் இடம்பெயர்ந்தோர் முகாம், பருத்தித்துறை |
| தங்கலிங்கம் கண்ணகிதேவி | கற்கோவளம் இடம்பெயர்ந்தோர் முகாம், பருத்தித்துறை |
| குணபாலசிங்கம் மனோன்மணி | சூசையப்பர் கோவிலடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை |
| ஜெ.செபமாலை | புனித நகர், கற்கோவளம், பருத்தித்துறை |
| தாசீசியஸ் மேரி லிப்னா | புனித நகர், கற்கோவளம், பருத்தித்துறை |
| ஜோர்ஜ் அந்தோனிப்பிள்ளை | புனித நகர், கற்கோவளம், பருத்தித்துறை |
| சபாபதிப்பிள்ளை | ராதா வாசம், வல்வெட்டி |
| தம்பாப்பிள்ளை செல்வரத்தினம் | வல்லாலை ஒழுங்கை, தும்பளை |
| வரப்பிரகாசம் மேரி மெட்டலின் | தொம்மையர் வீதி, பருத்தித்துறை |
| ருசீந்திரம் ஜெயலட்சுமி | தேனியம்பை வீதி, வல்வெட்டித்துறை |
| விவேகானந்தராசா கிருஷ்ணகுமார் | ஜீவன்ஸ் வீதி, பன்னையம்பதி, பருத்தித்துறை |
| கந்தசாமி சின்னக்கிளி | சல்லி வளவு, பொலிகண்டி |
| நடராசா கந்தசாமி | தங்கவேலாயுதம், சுப்பர்மடம், பருத்தித்துறை |
| ப.வேலும்மயிலும் | வல்வெட்டித்துறை |
| லிங்கராசா தமிழகம் | A.G.A. ஒழுங்கை, வல்வெட்டித்துறை |
| இன்னாசிமுத்து லோயலா | கென்றி அரசர் கல்லூரி முன்பாக, இளவாலை |
| தியாகராசா தனலட்சுமி | கல்வளை பிள்ளையார் கோயில் தெற்கு வீதி, சண்டிலிப்பாய் |
| கதிரன் மேரி | உச்சியோடை, மானிப்பாய் வடக்கு |
| கிருஷ்ணசாமி அன்புராணி | புலவர் இடம்பெயர்ந்தோர் முகாம், நவாலி |
| வேலாயுதம் சத்தியபாமா | அளவெட்டி தெற்கு, அளவெட்டி |
| வைரமுத்து ராஜேஸ்வரி | ஸ்ரீ பவனம், சங்குவேலி, சண்டிலிப்பாய் |
| | மே/பா.A.M. அல்பிரட் (ஆசிரியர்), டச்சு வீதி, பண்டத்தரிப்பு |
| செல்வராசா மைதிலி | சுதுமலை கிழக்கு, மானிப்பாய் |
| அரியகுட்டி லட்சுமிப்பிள்ளை | மானிப்பாய் வடக்கு |
| நாகம்மா செல்வராசா | |
| சிவஞானசுந்தரம் சுந்தரராணி | இலவச கல்வி நிலையம், மானிப்பாய் |
| அப்புத்துரை விக்னேஸ்வரன் | தம்பளாவத்தை, அளவெட்டி தெற்கு |
| மனோகரன் லலிதா | சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு |
| சவுந்தராசா ஜெகதாம்பாள் | சங்குவேலி, மானிப்பாய் |

(c/2924)


நிறஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், விஜயாவே, செந்தில் நடித்த

நேதாஜி

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) past Perfect

(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார், சாக்ஷி, வடிவேல் நடித்த




தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.


இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு இன்று முதல்

கமலஹாசன், பிரபு, சிநேகா நடித்த

காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, (பு.நே)

(சி-2725)


## மாற்றம் தந்திட மாவையில் தேரேறு



மாவையிலே தேரேறும் கந்தனே
மாற்றமினி எம் வாழ்வில் மலருமா?
ஆவலாய் இருக்கின்றோமே நீண்ட காலமாய்
அபிஷேகக் கந்தனின் சூழலில் வாழலாமென
காவலாய் இருந்தெம்மைக் காத்தவனே
காங்கேயன் நாமமதில் அருள்பவனே
பேயாய் அலைகின்றோம் பெம்மானே
பிறந்த மாவையெம்பதியை பிரிந்ததாலே
தீயாய் வேகுதையா நெஞ்சமெலாம்
தீமைகள் எம் ஊரினில் விளைந்ததனால்
கோவிலுக்கு வந்துன்னை கும்பிட
குறிப்பிட்ட நேரமேன் வகுக்கிறார்
சேவல் கொடிதனை ஏந்திய செவ்வேள்
சேதம் விளைந்ததேன் எம் பூமியில்
காவல் நீயென வாழ்ந்தவர்
கந்தனின் ஊரினைப் பிரிந்ததேன்

-தமிழீழன்

# ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைநது அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

. நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச் சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியஙகளை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :....................................

கற்கும் பாடசாலை :....................................

கற்கும் தரம் :....................................

வீட்டு முகவரி :....................................


.................... திகதி ....................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# சித்திரக்கதை

## குறும்பு V




கதை, ஓவியம் - ந.யருன் முற்றும்.

# கானகப்பள்ளி

நாட்டில் உள்ள பள்ளியைப்போல
நமக்கும் ஒன்று வேண்டுமெனக்
காட்டின் ராஜா கட்டளையால்
கானகப் பள்ளியைத் திறந்தாராம்.

யானைப் பெரியவர் ஹெட்மாஸ்ரர்
காண்டாமிருகம் உதவிக்காம்
ஓநாய், கரடி, சிறுத்தையுடன்
உறுமும் புலியும் டீச்சர்களாம்.

எலியார் முதலில் பள்ளிவர
எதிரே பூனைக்குட்டிவர
எலியார் பயந்து குட்டியுடன்
எங்கோ சென்று பதுங்கியதாம்.

மானார் தமது குட்டிகளை
மகிழ்ச்சியோடு கூட்டிவர,
ஓநாய் டீச்சர்தனைப் பார்த்து
ஓடிப் புதரில் மறைந்ததுவாம்.


ஆட்டுக் குட்டிகள் ஆவலுடன்
அந்தப் பள்ளியில் சேரவர,
கோட்டுப் போட்ட கரடியினை
கண்டதும் கம்பியை நீட்டியதாம்.

குரைக்கும் நாயைக் கண்டவுடன்
குட்டிப் பூனை பயந்தோட,
நரியைக் கண்டு முயற்குட்டி
நாலுகால் பாயச்சலில் ஓடியதாம்.

சிறுவர் எவரும் இல்லாமல்
திறந்த பள்ளி என் செய்யும்
திறந்த அன்றே மூடுவிழா
சிறந்த முறையில் நடந்ததுவாம்.

ச. அருள்பவன்
இணுவில் மத்திய கல்லூரி

## ஜோடி இல்லா மீனை தேடிக் கண்டுபிடியுங்கள்



# தெரிந்துகொள்ளுங்கள்

• சூரியஒளியில் ஏழு விதமான நிறங்கள் உள்ளன. அந்த ஏழு நிறங்களையும் வான வில்லில் சாதாரணமாகப் பார்க்கலாம். நிறங்கள் ஏழு வகையாக இருந்தாலும் -சிவப்பு, நீலமும்தான் அடிப்படை நிறமாகும். இந்த இரண்டு நிறங்களின் பல்வேறு வகைக் கலப்பினால்தான் பிற நிறங்கள் தோன்றுகின்றன.

• ஒட்டகத்துக்குப் பார்வையும், மோப்ப சக்தியும் அதிகம். ஒரு மைலுக்கு அப்பால் தண்ணீர் இருப்பதைக்கூட அது கண்டுபிடித்து வடும்.

• முதலையால் கழுத்தைத் திருப்ப முடியாது. ஆகையால், இதன் வால் பக்கமாகச் சென்றால், இதனிடமிருந்து தப்பித்து விடலாம்.

• ஐஸ்கட்டி தண்ணீரில் மிதப்பதுபோல, உலகில் ஐந்து கண்டங்களும் மிதக்கின்றன, இடம்பெயர்ந்து செல்கின்றன. வருடத்துக்கு இரண்டரை மில்லி மீற்றர் வீதம் இடம்பெயருகின்றன.

# எனது செல்லப்பிராணி

1. எனது செல்லப்பிராணி நாய் ஆகும்.
2. அதன் பெயர் வீமா.
3. அது இறைச்சியை விரும்பி உண்ணும்.
4. வீமா நன்றி உடைய மிருகமாகும்.
5. அதன் நிறம் கறுப்பும், வெள்ளையுமாகும்.
6. நான் மாலை நேரத்தில் அதனோடு விளையாடுவேன்.
7. அதை நான் மிகவும் நேசிக்கின்றேன்.

ராமேஸ்வர், தரம் - 4
பரியோவான் கல்லூரி

இங்கே மடிக்கவும்






**சிந்தனைக்கு!**
அறிவுக்குறைவை விடக் கவனக்குறைவுதான் அதிகத் துன்பங்களை உண்டாக்குகின்றன.


# சிறுவர் அரங்கம்

# ஜிம்மி

எனது பெயர் ஜிம்மி. எனக்கு இப்போது வயது ஆறு மாதங்கள் மட்டுமே. வயதை வைத்து எதுவும் தெரியாத சிறுவன் நான் என்று தவறாக நினைத்து விடாதீர்கள். கருத்தாக வீட்டைக் காவல் காப்பதும், ஓய்வாக இருக்கும் போது அற்புதமான கதைகளை எனது நண்பர்களுக்குச் சொல்வதும் எனது விருப்பமான பொழுது போக்குகளாகும்.



அவற்றைத் தவிர சுவையான எலும்புகளைக் கடித்துச் சாப்பிடவும், வெதுவெதுப்பான தூமபுக் கால்மிதியில் படுத்து, சுகமாக நித்திரை கொள்ளவும் - எனக்கு மிகவும் பிடிக்கும். எனினும், நாள் முழுவதும் பரண் மேல் ஏறிப் பதுங்கி, பாதிக்கண்கள் மூடி நித்திரை கொள்ளும் கறுப்பன்போல நான் சோம்பேறி அல்லன்.



கறுப்பன் யார் என்பதை உங்களுக்கு நான் இன்னும் சொல்லவில்லை அல்லவா. அவன் வேறு யாருமில்லை எங்கள் வீட்டில் வாழும் பூனைக் குட்டிதான். நேரம் தவறாது பால் குடிப்பதும், பரணில் ஏறிப்படுத்து உறங்குவதையும் தவிர வேறு எந்த வேலையும் அவனுக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

பசியெடுககும் நேரததில் மியாவ், மியாவ் என்று தொண்டை கிழியக் கத்தி, என்னை மட்டுமல்லாது, வீட்டில் வசிப்பவர்கள் அனைவரையுமே தொந்தரவு செய்வது அவனுக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்காகும்.

யாருமில்லாத நேரம் பார்த்து அடுப்படிக்குப் போய், பால் பானையைத் தட்டித் திறப்பதும் அவனது பொழுது போக்குகளில் ஒன்றாகும்.

நான் அவனைப் பலமுறை கையும் களவுமாகப் பிடித்து எச்சரிக்கை செய்திருக்கிறேன்.

ஆயினும், அவன் செய்த தவறைத் திருப்பிச் செய்து கொண்டுதானிருக்கிறான். சிலரைத் திருத்தவே முடியாது என்று பெரியவர்கள் சொல்வது என்னவோ அவனைப் பொறுத்த வரை மிகவும் சரியானதுதான்.

கறுப்பனைப் பற்றி இவ்வளவு விரிவாக உங்களுக்கு நான் சொல்வதற்குக் காரணம் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?

அவனது குணத்தை எனது நண்பர்களான நீங்கள் நன்கறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான். ஏனெனில், இப்போது உங்களுக்கு நான் சொல்லப்போகும் சுவையான கதையானது - கறுப்பனை மூலமாக வைத்து, நடந்து முடிந்த மறக்க முடியாத ஒரு உண்மைச் சம்பவமேயாகும்.

அன்றொரு நாள் - இனிமையான மாலைப் பொழுதொன்றிலே வீட்டில் நான் அமைதியாக நித்திரை செய்து கொண்டிருந்தேன். சுகமான தூக்கத்திலே சுவையானதொரு எலும்பைக் கடிப்பதுபோலவொரு அற்புதமான கனவு.

கனவிலே எலும்புத் துண்டை ரசித்துக் கடித்துக் கொண்டிருந்த என்னை, திடுக்கிட்டு எழச் செய்தது கறுப்பனின் மியாவ் என்ற காட்டுக் கத்தல்.

தூக்கம் கலைந்து, கோபத்தோடு எழுந்து பார்த்தேன். கறுப்பனைக் கடித்துக் குதறிவிடலாமா என்று எனக்குத் தோன்றியது. சுகமான தூக்கத்தில் சுவையானதொரு எலும்பைக் கடிப்பது போன்ற அரிதான கனவைக் கலைத்த அந்தப் படுபாத கனைத் தேடி, ஆத்திரத்தோடு எழுந்து ஓடினேன்.



வீட்டில் எல்லா இடத்திலே தேடியும் அந்தக் குறும்பனை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், அவன் அடித் தொண்டையால் மியாவ்... மியாவ்... என்று கத்துவது மாத்திரம் எனது காதுகளில் தெளிவாக விழுந்தது.

மாயமாய் மறைந்து கொள்ளும் மந்திரசக்தி எதையாவது தெரிந்து கொண்டு விட்டானோ? பொல்லாத கறுப்பன் என்றுகூட நான் நினைத்தேன்.

அது சரி, உலக மகாசோம்பேறியான அவனுக்கு, தூங்கி வழிவதற்கும், அடுப்படிக்குச் சென்று திருட்டுத்தனமாகப் பால் பானையை உருட்டுவதற்குமே நேரம் சரியாயிருக்கும்.

அந்த லட்சணத்தில் அவனாவது மாயவித்தைகளைக் கற்பதாவது. யன்னலில் ஏறி வெளியே எட்டிப்பார்த்தேன். முற்றத்திலே தானியங்களைக் கொத்திச் சேர்த்துக் கொண்டிருந்த சிவப்புக் கொண்டைச் சேவல் அண்ணனைக் கண்டேன்.



சேவல் அண்ணா, சேவல் அண்ணா - கறுப்பனை நீங்கள் எங்காவது பார்த்தீர்களா? என்று சேவல் அண்ணனிடம் கேட்டேன்.

இல்லை ஜிம்மி. அவனை நான் இன்றைக்குப் பார்க்கவில்லை ஏன் என்ன நடந்தது? என்று சிவப்புக் கொண்டைச் சேவல் அண்ணன் என்னைப் பார்த்து அன்போடு கேட்டார்.

யன்னலில் இருந்தும் குதித்துக் கீழே இறங்கி சேவல் அண்ணனில் அருகே சென்று அமர்ந்தேன். சேவல் அண்ணா, பொல்லாத அந்தக் கறுப்பன் வீட்டிலிருந்து கொண்டு, எனக்குத் தரும் தொல்லைகள் ஏராளம்.

சுகமாக நித்திரை செய்யும் நேரம் பார்த்து அடித்தொண்டையால் காட்டுக் கத்தல் கத்தி, எனது தூக்கத்தைக் கெடுக்கிறான் என்று சேவல் அண்ணனிடம் முறையிட்டேன்.


- யோ.சத்யன்

(தொடரும்...)

# உங்கள் கைவண்ணம்



நிதிபன்




எஸ்.வரதராசா
அல்வாய் கிழக்கு, அல்வாய்

## மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

1) 37 (ஒவ்வொரு எண்ணுடனும் 6 கூட்டப்பட்டுள்ளது).
2) 9. I - 13 (முதல் எண்ணிலிருந்து இரண்டாம் எண்ணைக் கழிக்க வரும் விடையின் அடுக்குத் தொகை)

புதிர் விடைகள்
1. 3 வான்கள், 8 கார்கள்



மொத்தக் கூட்டுத் தொகை = 78
முதலாவது துண்டு = 11+12+1+2 = 26
இரண்டாவது துண்டு = 10+9+3+4 = 26
மூன்றாவது துண்டு = 8+7+6+5 = 26

# புதிர்கள்

1. ரூபன் 6 பொம்மைகளை ரூபா 18 இற்குக் குறைவான விலையில் வாங்க நினைக்கிறான். அவன் ஒரு பொம்மையை என்ன விலைக்கு வாங்கவேண்டும்?

2. மயூரன் 11 ரூபாவைக் கடைக்கு எடுத்துச் சென்கின்றான். 3 பொம்மைகள் வாங்க அவனுக்கு ஒரு ரூபா தேவைப்பட்டது. ஒரு பொம்மை என்ன விலை?

3. ஒரு பொம்மை என்ன விலை என்று கேட்டதற்கு, கீதா விளையாட்டாக கூறினாள் - ஒரு பொம்மையின் விலையின் மூன்று மடங்கிலிருந்து நான்கு ரூபாவைக் கழித்தால், ஒரு பொம்மையின் விலை கிடைக்கும் என்றால், ஒரு பொம்மையின் விலை என்ன?

**இறுதியில் என்ன எண் வரும்**

4 - 2 - 4
8 - 5 - 9
9 - 6 - ?

**2. கடைசிக் கட்டத்தில் என்ன எண் வரும்?**

| 90 | | 66 | | 28 | |
|---|---|---|---|---|---|
| 5 | 50 | 7 | 40 | 6 | ? |

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இது தான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



# மருத்துவ மேதை

இங்கிலாந்து மருத்துவர் எட்வர்ட் ஜென்னர். 1796 ஆம் ஆண்டில் பெரியம்மைக்குத் தடுப்பூசியைக் கண்டுபிடித்தார். பலத்த எதிர்ப்புக்கள் எழுந்தாலும், பயப்படாமல் பயன்படுத்தினார். இன்று அது உயிர் காக்கும் தடுப்பு மருந்துகளில் ஒன்றாகும்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :.............................................
கற்கும் பாடசாலை :.............................................
கற்கும் தரம் :.............................................
வீட்டு முகவரி :.............................................
பிறந்த திகதி :.............................................
ஆர்வமுள்ள துறைகள் :.............................................
.............................................

............................ ............................
திகதி ஒப்பம்

............................ ............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# அன்புள்ள சிறுவர்களே!

சிறுவர் அரங்கம் உங்களுடைய பகுதி. உங்களுடைய ஆக்கங்களே இடம்பெறவேண்டும். வித்தியாசமான உங்களுடைய ஆக்கங்களை சிறுவர் அரங்கம் எதிர்பார்க்கிறது. கதை, சித்திரக்கதை, ஓவியம், துணுக்குகள், கவிதை, கட்டுரைகள் போன்றவற்றை நீங்கள் எழுதி அனுப்பலாம். கட்டுரைகள் எழுதும் பொழுது வித்தியாசமான தலைப்புகளில் எழுதுங்கள். உங்களைச் சுற்றி நடக்கும் விடயங்களை அவதானித்து, அவற்றை எழுதி தலைப்பிட்டு அனுப்பலாம்.

பாடசாலையில் ஒரு நாள் ........
பிரயாணம்,
காலை நேர மேகங்கள்,
சூரிய அஸ்தமனம்,
அழகான பறவைகளும் வீட்டுத் தோட்டமும்.

இப்படி உங்களுக்கு விரும்பிய ஏதாவதொன்றைப் பற்றி எழுதலாம்.

இதுவரை ஓவியப் போட்டிக்கான ஓவியங்களை அனுப்பாதவர்கள் - வரைந்தனுப்புங்கள். ஏற்கனவே அனுப்பியவர்கள் அனுப்பத் தேவையில்லை. மறந்துவிடாதீர்கள்.

**ஓவியப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 10.09.2004.**

பாசமுடன் - சாரு அக்கா

# விடுகதைகள்

1. முன்னும் போவான், பின்னும் போவான், ஒற்றைக்காலிலே நிற்பான். அவன் யார்?
2. சிவப்புப் பைக்குள் சில்லறைக் காசுகள். அது என்ன?
3. மேற்பள்ளம், கீழ்ப்பள்ளம் - நடுவில் நெளிந்து பாயும். அது என்ன?
4. எங்க அக்கா வெள்ளை, அவளைச் சுற்றி ஐந்தாறு பிள்ளைகள். அது என்ன?
5. தொட்டால் மணக்கும், கடித்தால் புளிக்கும். அது என்ன?

விடைகள்

1. கதவு
2. செத்தல் மிளகாய்
3. நாக்கு
4. வெள்ளைப்பூடு
5. எலுமிச்சம்பழம்

கு.பிரியங்கா, தரம் - 4
சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை

# கவிஞர்கள்

ஒரு முறை பாரதியார் திருவனந்தபுரம் சென்றிருந்தபொழுது, அங்கிருந்த மிருகக்காட்சி சாலைக்குச் சென்றார். அங்குள்ள எல்லா மிருகங்களையும் கைகளால் தொட்டுப் பார்க்கத் தொடங்கினார். பக்கத்தில் இருந்தவர்கள் சொல்லியும் கேட்கவில்லை. சிங்கத்தையும், புலியையுமாவது தொடவேண்டாம் என்று காவற்காரன் கேட்டுக் கொண்டான். பாரதியார் அதையும் கேட்காமல் - நீ மிருக அரசன். நான் கவி அரசன் உன்னைக் காண வந்திருக்கிறேன். நீ உன் கர்ஜனை மூலம் உன் அன்பை எனக்குத் தெரியச் செய் என்று சொல்லி, சிங்கத்தைத் தடவிக் கொடுத்தார்.

சிங்கமும் மகிழ்ந்து, கர்ஜனை செய்து தன் அன்பை வெளிப்படுத்தியது. அருகில் இருந்தவர்கள் வியந்து நின்றார்கள்.

# ஒலிம்பிக்ஸ் - 2004




கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டி - 28 ஆவது ஒலிம்பிக் போட்டியாகும். 38 மைதானங்களில், 28 வகையான விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன.

இந்த முறை ஏதென்ஸ்ஒலிம்பிக் சின்னம் - ஒலிவ் இலைகளால் உருவாக்கப்பட்ட மலர்வடிவமாக அமைந்திருக்கிறது. ஒலிம்பிக்கின் அடிப்படைத் தத்துவங்களான - பாரம்பரியம், சகோதரத்துவம், கொண்டாட்டம், கருணை போன்றவற்றை இந்த மலர் வடிவம் குறிக்கிறது. முற்கால ஒலிம்பிக் சம்பியன்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டது. இந்த ஒலிவ்மர இலைகோ் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக் உலக விளையாட்டு வீரர்களின் கனவு. இதில் பதக்கம் பெறுவதைவிட, பங்கேற்பதே மிகப்பெரிய கௌரவமாகக் கருதப்படுகிறது. ஒலிம்பிக் வீரரெனத் தனது பெயரும் உச்சரிக்கப்படவேண்டும் என்றே ஒவ்வொரு விளையாட்டுவீரரும் நினைக்கிறார்கள்.

மற்றைய எந்த விளையாட்டுக்கும் இல்லாத பாரம்பரியச் சிறப்பு - ஒலிம்பிக்கிற்கு மட்டுமே உண்டு.



ΑΘΗΝΑ 2004

ஆம்! பல ஆயிரம் ஆண்டு நீண்ட, நெடிய, பாரம்பரியம் உலக வரலாற்றில் இந்த ஒரு விளையாட்டுப் போட்டிக்கு மட்டுமே உண்டு. நேற்று ஏதென்ஸில் ஆரம்பித்த ஒலிம்பிக் போட்டிகள், வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது. அதனைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்.

ஐரோப்பியக் கண்டத்தில் இருக்கும் ஒரு சின்னஞ்சிறிய குட்டித் தேசம் கிரீஸ். ஒரு காலத்தில் கிரேக்கப் பேரரசர்கள் கொடிகட்டி ஆண்டமண் இது. கலாசாரம், தத்துவம் உட்படப் பல்வேறு அரிய கண்டுபிடிப்புகளை உலகுக்குத் தந்த பூமி. உலகப் பேரரசர்கள் பலர் தடம் பதித்துச் சென்ற மண் இது. வரலாற்றுப் பாரம்பரியம் நிறைந்த கிரேக்கமண்ணில் தான் ஒலிம்பிக் பிறந்தது.

ஒலிம்பிக் வரலாறு தெரிந்து கொள்வதற்கு முன்னர், கிரேக்கக் கலாசாரம் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம். ஏனெனில், கிரேக்க கலாசாரத்திலிருந்துதான் ஒலிம்பிக்கே தோன்றியது எனலாம்.

பண்டைக்கால (கிறிஸ்து பிறப்பதற்கு முன்) கிரேக்கர்கள் பெருமளவு மதச் சடங்குகள் (திருவிழாக்கள்) கொண்டாடுவார்கள். அவர்களுக்கு ஒரு பழக்கம் கடவுள் போட்டிகள் இன்றிக் கொண்டாடினால், அந்த மதச் சடங்கு பூர்த்தியான முழுத்திருப்தி அவர்களுக்குக் கிடைக்காது. ஆகவே, எந்தத் திருவிழா என்றாலும் கட்டாயம் விளையாட்டுப் போட்டிகள் இருக்கும்.


கிரேக்க மக்கள் அப்போது நான்கு முக்கிய, தேசிய விழாக்களைக் கொண்டாடினார்கள். அவை - இஸ்த்மியன், நெமியன், ஒலிம்பிக் மற்றும் பைதின். இதில் மற்ற மூன்றையும்விட, ஒலிம்பிக் விழாவுக்கு மதிப்பு அதிகம். காரணம், கிரேக்கக் கடவுள்களுக்கெல்லாம் கடவுளாகக் கருதப்படும் ஜியஸ் புகழ் பரப்பும் விழா இது. ஆகவே, கிரேக்கர்கள் வாழ்வில் ஒலிம்பிக் முக்கிய இடம் பிடித்தது. கிரேக்க நாட்டின் தென்பகுதியிலுள்ள ஒலிம்பியா நகரில் இந்த விழா நடக்கும்.

உலகின் முதல் ஒலிம்பிக் போட்டி இங்கு கி.மு (கிறிஸ்து பிறப்பதற்கு முன்) 776 ஆம் ஆண்டில் இங்கு நடத்தப்பட்டது.

(தொடரும்...)

# மாவைக்கந்தன் இரதோற்சவ சிறப்பிதழ்

## வாழ்வு பெற்ற வல்லியான் மாவிட்டபுரம்



ஆடி அமாவாசையைத் தீர்த்த நாளாகக் கொண்டு 25 தினங்கள் கொண்ட திருவிழாக்கள் ஆதியிலிருந்தே தொடர்ந்து வருகின்றன. இங்கேதான் முதன் முதலில் மூன்று திருவீதிகள் அமையப் பெற்று, மூன்றாம் வீதி தேரோடும் வீதியாக அமைந்து, இன்றும் அவ்வாறே செயற்படுகிறது. முகோமந்திர மகாரத மும் இங்கேதான் முதன்முதலாக உருவம் செய்து 1792 ஆம் ஆண்டளவில் உபயோகமானது. இன்றும் இந்தத் தேர் தனது சுயசரிதத்தை விளக்கும் முகமாக மௌனபூசையில் அமர்ந்திருக்கிறது.

தேரிலன்று ஷண்முகப் பெருமானது திருக்காட்சிதான் அற்புதமானது. அழகான ஷண்முக மூர்த்தியை சகலகலா பண்டிதரான ஏரம்பஐயர் தமது கரங்களாலேயே உருவகம் செய்ததென ஏட்டுச்சுவடிகள் காண்பிக்கின்றன. ஸ்கந்த சஷ்டியில் உபவாசம் இருந்து திருக்கார்த் திகையன்று மெழுகில் இந்த உருவினை வார்த்தெடுத்து, வைகாசி விசாகத்தன்று பஞ்சலோக வார்ப்பினால் இந்த மூர்த்தியை உருவகம் செய்து, சிவபூசா துரந்தர்கள் வேத கீதமொலிக்க, மெய்யடியார்கள் திருமுறை ஓத, இளம் மங்கையர்கள் அஷ்டமங்களங்களைத் தாங்கியிருக்க, குழலி சைகள் ஒலிக்க, ஸ்கந்த, காயத்திரி ஜெபங்களை அஷ்டதிக் குகளிலுமிருந்து அந்தணர்கள் ஜெபிக்க இந்தச் 'ஷண்முக பரஞ்சுடா' பூமியின்மேல் பஞ்சலோகம் மூலம் தோன்றினாரெனவும், இதனை முதன்முதலாக தரிசித்தவர் அப்போது ஈழநாட்டு அரசனாக அமைந்திருந்த ஜெயவீர சிங்கையாரிய சக்கரவர்தியென (1458-70) தரவுகள் இருந்தன.

ஆனி உத்தரத்தில் கும்பாபிஷேகமேற்ற இந்த மூர்த்தி, 5 ஆம் திருநாளில் சிவபக்தர்களை இரட்சிக்குமுகமாக, ஆனந்த நடனமும், 24 ஆம் திருநாளன்று தேரேறி திருவீதி வலம் வந்து

'எங்ஙனும் திருவகனங்கள், எங்ஙனும் விழிகள்
எங்ஙனும் திருக்கேள்விகள் எங்ஙனும் கரங்கள்
எங்ஙனும் திருககழல்கள், எங்ஙனும் வடிவம்
எங்ஙனும் செறிந்து அருள் செய்யும் ஆறு
முகத்தினருக்கே'

என்ற கந்தபுராணத்திற்கமைய அமைந்து மகா மேருவினின்றும் சிதறிய சிகரங்களுள் ஒன்றுதான் ஈழநாடென ஆன்றோரின் முடிவு. சிவபூமி என திருமூலரால் அழைக்கப்பட்ட இவ் ஈழவளநாடு சிறந்த வளங்களைத் தன்னகத்தே கொண்டு, இலங்கையென மருவிற்று. கந்தபுராணம், இராமாயாணம், மகாபாரதம் யாவும் இலங்கை குபேரனாலும், இராவணனாலும், விபீஷணனாலும் ஆளப்பட்டதென தரவுகள் தருகின்றன. சைவமும் தமிழும் தருநடமாடுவதற்கிடமாக இலங்கை விளங்கியது. தேவாரப்பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்பனவும் திருப்புகழ் பாடல் பெற்ற கதிர்காமம் ஆகிய தொன்மைத் தலங்களையும் தன்னகத்தே கொண்டது இலங்கை. இலங்கையின் வடபால் நகுலேஸ்வரமும், அதன் கடல் மருங்கில் சிவபிரானாலேயே தோற்றுவிக்கப்பட்ட கண்டகி தீர்த்தமும், முனிவர்கள் வாசம் செய்யும் மலைக்குகைகளும் இன்றும் காணக் கூடியதாக உள்ளது. இங்கெல்லாம் தீராத பிணி கொண்டோர் தீர்த்தமாடி குணமடைந்த வரலாறுகள் ஏராளம் இந்த வகையில் சோழ இளவரசி கொண்ட பிணி முகமும், குஷ்டரோகமும் கண்டகி தீர்த்தமாடி நோய்கள் நீங்கப் பெற்றதனால், கந்தனதும் திருவருள் பெற்று வேற் பெருமான் கோவிலாகவிருந்த ஆலயத்தை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலாகப் புனரமைத்து சிதம்பரத்திலிருந்து தீக்ஷிதர் பெரியமனத்தாரை அழைத்து, அவரிடம் ஒப்படைத்து பூமியும் வானமும் இருக்கும்வரை எக்காலமும் அவரும் அவரது சந்ததியினரும் 'மஹாராஜஸ்ரீ' யாக இவ்வாலயத்தை நிர்வகிக்க வேண்டுமென உத்தரவிட்டு, கோவில் கருமங்களுக்கு வேண்டிய பல்துறைசார் வல்லுனர்களையும் அழைப்பித்து இங்கு குடியேற்றி மகிழ்ந்தார். இன்றும் பரம்பரை பரம்பரை ஆதிக்கம் சகலதுறைகளிலும் இந்தக் கோவிலில் பேணப்பட்டு வருகிறது.

'தெய்வநிறை சந்நிதிச் செந்நின்று கைநீட்டித்
திருவருட்திறங்க ளுன்னித் தேயுமன மழியுமவர்
கெங்கைக்கு மெட்டு ந, என மாவை முருகனது திருவருட

கொடையைப் பெற்ற புலவர் பண்டிதர் கந்தையா பாடியுள்ளார்.

இன்று இந்தச் சண்முகப் பரஞ்சோதியின் அருள் மாட்சிமை பேணிக்காக்க அந்தணர்கள், காயத்திரி ஜெபம், நாம அர்ச்சனைகள், நான்கு வேதகீதங்கள், எனறெல்லாம் பெருமானிடம் சொரிந்து கண்மணி போன்று இந்தப் பரஞ்சுடரை பேணிப் காப்பாற்றுவதும் இந்தச் சிவபூமி பெற்ற தவப்பயனேயாம்.

## ஆசியுரை

'சிவகோடி யடையமுனஞ் செம்மறசக்கீரவனால்
அவகோடி யகற்றியற்றறு கோடி யாலயமுந்
தவகோடி வீ'_ணாணாற்றரு முக்கோடியுமாக
நவகோடி சிவாலயங்க ணணய திலங்காநகரம்'

முதன் முதலாக சிவபூமியாக விளங்கிய இந்நாட்டின் வடபால் "வீணாகானபுரம்" என்று அழைக்கப்பட்ட குடாநாட்டு ஊத்துமுகம் பெருந்திய செந்தமிழ்ப் புலவர்களைக் கொண்டிருந்தது. ஆரியச் சக்கரவர்த்திகளால் ஆளப்பட்ட இந்தச் சிவபூமியில் ஜெயதுங்கவராஜனது கொடைத் திறனைக் கேள்வியுற்ற சோழநாட்டு "கலிவீரராகவன்" என்னும் குருடன் இவ்வரசன் பெயரில் ஓர் பிரபந்தம் இயற்றி, யாழ் மூலம் அதனை இசைத்து அரசனை மகிழ்வித்தமையால் "மணற்றிடல்" என்னும் இந்தப் பிரதேசத்தை கவிஞனுக்கு அரசன் பரிசாக வழங்கினான். அன்றிலிருந்து இந்தப் பிரதேசம் யாழ் பாடியின் நினைவாக "யாழ்ப்பாணமாயிற்று" சைவமும், தமிழும் செங்கோல் ஆட்சிய இந்தப் பிரதேசத்தினுள் எப்போது பறங்கியரும், ஒல்லாந்தரும் நுழைந்தார்களோ அன்றே யாழ்ப்பாணத்திற்கு கேடு ஆரம்பமானது. கூடவே கிறீஸ்தவ பாதிரிமார்களது சூம்ச்சிகளும், தொல்லைகளும், இடையூறுகளும் தொற்றுநோய் போன்று வளர ஆரம்பித்தன. இது ஆளும் வர்க்கத்தவர்களது துணைகளாலும் பெருகியது. இதனால் வீழ்ச்சி கண்டது செந்தமிழ் அரியணை. சைவமும் ஒடுங்கியது எனினும் சைவச் சான்றோர்களது மௌன அஞ்சலிகளும், பிராத்தனைகளும் வீண்போகாது இப்போது மெல்லமெல்ல ஆயாதிகளது செயற்பாடுகள் அற்றுப்போக, இழந்துபோன சைவக் கலாசாரங்களும், செந்தமிழ்ப் புலமைகளும் துளிர்பெறுகின்றது.

இற்கு சகல ஆலயங்களிலும் தமிழ் ஓசை கேட்கவேண்டும். நான் மறை ஓசைகள் சூழலில் தங்கவேண்டும் திருவருட்காட்சிகள் பொலிவோடு வளரவேண்டும், சமுத்திர தீர்த்தங்கள் ஆடி- எம் இறைவனை நினைத்துப் பிராத்திக்க வேண்டும். இவற்றை சைவ மக்கள் அனைவரும் முதற்கருமமாகக் கொண்டு இயங்கின் வீணாகான புரத்தின் மாட்சிமையை மிக எளிதில் நாம் காணலாம். மாவைக் கந்தன் ஆலய உற்சவ காலத்தில் தோரேறி வரும் சண்முகப் பொருமானிடம் அணைந்து திருப்புகழ் அஞ்சலியால் பெருமானை மகிழ்வித்து, அந்தப் பொருமானது திருவருட்ச் செல்வங்களை கைநீட்டிப் பெற்றுய்யுமாறு சிவபக்தர்களை வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

- மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்
பிரதமகுரு - தெல்லிப்பளை.

## பிரதான அனுசரணை: மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்

## விளம்பர அனுசரணை:

மாவையில் மீண்டும் மக்கள் குடியேற வரமருள்வாய் வடிவேலா

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும், பொருத்திக் கொள்ளவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக்கணேஷ்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழப்பாணம்.
T.P: 021 - 222 2486

இல. 91, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்

கிளை நிறுவனங்கள்:
இல.80, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

புதுப்பொலிவுடன் யாழப்பாணத்தில்

FedEx.
Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

Opposite Diolag Phone Shop
259, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.
T,P: 021 222 7835
Fax: 021 222 7836

பலநோக்கு கூ.ச.முன்பாக,
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T,P: 021 222 7560
Fax: 021 222 7310

E.Mail:thirumugan@lycomail.com

பகைமுடித்து பவனிவரும் முருகா குறைமுடிக்க குரல்கொடுத்தோம் வருவாய்

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

தலைவர், பணிப்பாளர்,
பணியாளர்கள்.



தேரேறிவரும் தமிழ்க்கடவுள் தீராத நோய் தீர்ப்பான்

யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான
ஜவுளிகளின் சங்கமம்

சீலகுணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 2063

(சி/2600)

யாழ் நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக
உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற
SILVER SHIELD SOCKS

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்



303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 222 5392



அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

பொன்னரசி நகையகம்

76A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0777 066427, 021-222 7648

# யுவதியிடமிருந்து சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடப் பகுதியில் இளம் பெண் ஒருவரை தள்ளிவிழுத்தி விட்டு, இரண்டு நபர்கள் அவரது சங்கிலியை அபகரித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் சில தினங்களுக்கு முன்பு நடைபெற்றது. ஆறுகால்மடத்தைச் சேர்ந்த கலைவாணி என்பவரின் சங்கிலியே திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

வேலை முடிந்து மதியம் தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த நேரம் - வீதியில் வந்த இரண்டுபேர் பெண்ணை கல்லுக்குவியல் ஒன்றின் மீது தள்ளி விழுத்திவிட்டு, சங்கிலியை அபகரித்துத் தப்பிச்சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (தீ)

# சமூகத்தில் புலவர்கள், கலைஞர்களுக்கு விழா எடுத்து பெருமைப்படல் வேண்டும்

## உருவச்சிலை திறப்பு விழாவில் ஆறுதிருமுருகன்

(மானிப்பாய்)

தமிழ்ப்பணி செய்த புலவர்களுள், தனிச்சிறப்புமிக்க புலவராக இருந்து பணியாற்றியதுடன், 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடிய ஓர் கல்விமான் நவாலியூர் சோமசுந்தரப் புலவராவார்.

இவ்வாறு நவாலி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் உருவச்சிலை திறப்புவிழாவில் கலந்துகொண்டு, அவரின் உருவச்சிலையைத் திரைநீக்கம் செய்து வைத்து உரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது -

இன்று எத்தனையோ கலைஞர்கள், புலவர்கள் பாராட்டப்படாமல், கௌரவிக்கப்படாமல் இருக்கிறார்கள். எனவே, இன்று யாழ்.குடா நாட்டில் பல பொது அமைப்புக்கள், பல நிதியங்கள் இருந்தபோதிலும், அவர்கள் இவ்வாறான பணிகளை, பாராட்டுக்களைச் செய்யாதது மிகவும் மனம் வருந்தத்தக்க ஒரு நிகழ்சசியாகும்.

இன்று பல கல்விமான்கள், சமூக சேவையாளர்கள் பாராட்டப்படாமல் இருக்கிறார்கள்.

ஆனால், நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிந்தனைகளை சொந்த மண்ணில் வாழும் மக்கள் நன்றி மறவாது, நினைவு கூர்ந்து நவாலியூர் சமூகத்தினர் அவருக்குச் சிலை வடித்து, அவருக்கு இன்று விழா எடுத்துள்ளனர்.

இந்தச் செயற்கரிய செயலை நவாலியூர் தில்லைநாதன் சந்திரகுமார் (சந்திரன்) சிற்பக்கலைமணி அதனைத் தன் சொந்தச் செலவில் நவாலி மகாவித்தியாலயத்துக்கு வழங்கியுள்ளார்.

சிற்பக்கலைமணி நவாலியூர் சந்திரன் இந்த மகாவித்தியாலயத்தின் பழைய மாணவராவார். இவர் இந்தச் செயலை ஆன்மீக ரீதியாக மனங்கொண்டு செய்த காரியம் இன்று போற்றுதற்குரிய செயலாகும் என்றார்.

இந்த நிகழ்ச்சிக்கு - வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பலாலி ஆசிரிய கலாசாலையின் இளைப்பாறிய அதிபர் சோ.பத்மநாதன் மற்றும் யாழ்.வர்த்தக வங்கி முகாமையாளர் ரவீந்திரா ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. (100)

## கரப்பிரான் ஆலயத்தில் விசேட அபிஷேகம்

குருபகவான் சிம்ம ராசியிலிருந்து - கன்னி ராசிக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழன் பிரவேசிப்பதால், அன்றையதினம் ஆனைக்கோட்டை கரப்பிரான் ஆதிவிநாயகர் ஆலயத்தில் காலை 9.30 மணி தொடக்கம் விசேட ஹோமம் வளர்நது, தேவ மந்திரங்கள் ஓதப்பட்டு, அபிஷேகம் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது (100)

# ஐ.ஓ.எம். அதிகாரிகள் நெடுந்தீவுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து மீளக் குடியமர வரும் குடும்பங்களுக்கு, பல வழிகளிலும் உதவி செய்யும் ஐ.ஓ.எம் நிறுவன அதிகாரிகள் கடந்த புதன்கிழமையன்று நெடுந்தீவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு, நெடுந்தீவில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்துக் கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்த குடும்பங்களைச் சந்தித்து - அவர்களது பிரச்சினைகள், தேவைகள், தொழில் முயற்சிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டியுள்ளனர்.

இதேவேளை, நெடுந்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க நிர்வாகத்தினரையும், அவர்களது அலுவலகத்தில் வைத்துச் சந்தித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (113)

# யாழ்.மாநகர சபையினரால் இதுவரை 344 கட்டாக்காலிநாய்கள் அழிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினால் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட கட்டாக்காலி நாய்கள் அழிப்பு நடவடிக்கையின் மூலம், நேற்றுமுன்தினம் வரை 344 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் - பிடித்து அழிக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக கட்டாக்காலி நாய்களால் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்வதுடன், வீதி விபத்துக்களும் அதிகரித்துக் காணப்பட்டது.

இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு, வாரத்தில் நான்கு நாட்கள் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கடந்த காலங்களில் பொம்மைவெளிக் கடற்பிரதேசத்திலேயே நாயகளைக் கொன்று, புதைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தற்போது பாதுகாப்பு வலயம் காரணமாக இந்த நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், பிடிக்கப்பட்ட கட்டாக்காலி நாய்களைக் கொன்று, புதைப்பதில் பலத்த அசௌகரியங்களைத் தாம் எதிர்கொள்வதாக யாழ்.மாநகர சபையின் பொதுச்சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (கு)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய கலையரங்கத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## புனர்வாழ்வுத் திட்ட தொண்டர்களுக்கான ஒன்றுகூடல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட "ஊனமுற்றோருக்கான சமூக அடிப்படையிலான புனர்வாழ்வுத் தேசியு வேலைத் திட்டம்" தொடர்பாக தொண்டர்களுக்கான ஒன்று கூடல் யு.என்.எச்.சீ.ஆர். அதிகாரிகளால், நேற்றுமுன்தினம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடத்தப்பட்டது.

நெடுந்தீவில் ஊனமுற்றுள்ளவர்களுக்கு சுயதொழில் முயற்சி வழங்கல், முச்சக்கரவண்டிகள் வழங்கல் மற்றும் அவர்களது முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கல் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக தொண்டர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டதுடன், ஊனமுற்றோர் தொடர்பான தகவல்களை பெற்றுத் தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. (113)

## அரசியல் கட்சியினரின் அலுவலகம் இராணுவ முகாமாகிறது

(பருத்தித்துறை)

மந்திகையில் அமைந்துள்ள ஒரு அரசியற் கட்சியினரின் அலுவலகம் தற்போது இராணுவ முகாமாக மாறி வருகிறது.

தேர்தல் காலங்களில் மட்டும் இது அரசியற் கட்சியினரின் அலுவலகமாக இயங்கியது.

இவர்களின் பாதுகாப்புத் தேவைக்கென வந்த இராணுவத்தினர் - இதனை முகாமாகவே மாற்றியமைத்து விட்டனர்.

ஆனால், தற்போது அந்தக் கட்சியினரின் பெயர்ப்பலகை மட்டும் இருக்கிறது.

இந்தப் அலுவலகம் மக்கள் குடியிருப்புகளுக்கு அண்மையில் காணப்படுவதால், இந்தப் பகுதியில் வாழும் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். (14)

## காட்டுப் பன்றிகளின் தொல்லைகள் அதிகரிப்பு

(வடமராட்சி)

மந்திகைப் பகுதியில் காட்டுப் பன்றிகளின் தொல்லை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இவை இரவு வேளைகளில் கூட்டம் கூட்டமாக வந்து வெங்காயப் பயிர்களை நாசம் செய்து வருகின்றன.

விவசாயிகள் இரவுவேளைகளில் காவல் இருந்து, வெடிகொளுத்திச் சத்தமிட்டால்தான் அவை ஓடி மறைகின்றன.

இதனால், விவசாயிகள் மரக்கறி வகைகளைப் பயிரிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (14)

## அலங்காரத் திருவிழா

(ஏழாலை)

ஏழாலை சிவபூதநாயர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்: இந்தத் திருவிழாவில் - எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 108 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

தினமும் இரவு 7.30 மணிக்கு சிவத்திரு வ.குமாரசாமியின் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும் (100)

## ஆன்மீகச் சொற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில், பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் இடம்பெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில், நாளை காலை 11 மணியளவில் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா கீதையின் மகத்துவம் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (20)

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, யாழ். மாநகரசபை - மாணவர்களுக்கிடையே கட்டுரைப்போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தக் கட்டுரைப் போட்டியில், யாழ். மநாட சபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பங்குபற்றலாம்.

கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரண்டு பிரிவுகளாகப் போட்டி நடை பெறும்.

கீழ்ப்பிரிவில் தரம் - 7,8,9 மாணவர்களும். மேற்பிரிவில் தரம்- 10, 11,12 ஆகிய உயர் வகுப்பு மாணவர்களும் பங்குபற்றலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (100)



நெடுந்தீவுப் பிரதேசசபைக்கு விஜயம் செய்த பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா தனது விஜயத்தின் நினைவாக மரம் ஒன்றை நாட்டுவதைப் படத்தில் காணலாம். (113)

# பொன்னாலைக் கிராமத்தில் வீதி விளக்குகள் இன்மையால் பொதுமக்கள் பெரும் சிரமம்

பொன்னாலைக் கிராமத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் செறிந்து வாழ்கின்றபோதும், அங்கு வீதி விளக்குகள் பொருத்தப்படவில்லை. இதனால், பொன்னாலைக் கிராம மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், வீதி விபத்துக்கள் அதிகரிக்கும் சாத்தியங்களும் உள்ளதாக பொன்னாலைக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த உற்சவம் இந்த மாதம் நடைபெறவிருப்பதால், இரவுத் திருவிழா நேரத்தில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் இநத வீதியால் சென்று வருவர். இந்த நிலையில் இங்கு வீதி விளக்கு இல்லாதது பெருஞ்சிரமத்தை ஏற்படுத்தும்.

எனவே, இந்த அவசியமான சூழ்நிலையில் வீதிவிளக்குகள் பொருத்தப்பட்டால், மிகவும் பிரயோசனமாக இருக்கும் என இப்பகுதி மக்கள் கருத்து வெளியிட்டனர். (207)

# கச்சேரி ஒழுங்கை நீண்டகாலமாகத் திருத்தப்படவில்லை

யாழ். கச்சேரி ஒழுங்கை நீண்டகாலமாக புனரமைக்கப்படாது இருப்பதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்த வீதி - நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாது இருப்பதாகவும், சிறு மழை பெய்தாலும்கூட வீதியில் போக்குவரத்துச் செய்ய முடியாமல் இருப்பதாகவும், இந்த விடயம் தொடர்பாக யாழ் மாநகர சபையினருக்கும், யாழ்.அரச அதிபருக்கும் பல தடவை தெரியப்படுத்தப்பட்டபோதும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com


சிந்தனைக்கு

*தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை*
*தீரா இடும்பை தரும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தனக்குத்தானே எறிந்தகல்.

கிழக்கில் இடம்பெற்றுவரும் படுகொலைகள் உட்பட பல்வேறு சம்பவங்களும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை பலவீனப் படுத்தியுள்ளதாகவும், அதனைத் தாம் வெகுவாகக் கண்டிப்ப தாகவும், அரசாங்கத்தின் சார்பில் அமைச்சரவைப் பேச்சாள ரான அமைச்சர் மங்கள சமரவீர செய்தியாளர் மாநாடு ஒன்றில் கூறியிருக்கிறார்.

உண்மையில் கிழக்கில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்வை பாதிப்பதுடன், தொடர்ந்தும் பீதி உணர்வுடன் அவர்கள் அன்றாடம் தமது வாழ்க்கையைக் கழிக் கும் நிலையைத் தோற்றுவித்திருப்பதும் அனைவரும் அறிந்த விடயம்தான்.

இந்தப் படுகொலைகளும், வன்முறைகளும் இன்றைய சமா தானச் சூழலில் போர்நிறுத்த உடன்பாட்டின் அம்சங்களைப் பாதிப் பதாக அமைந்து வருகின்றதென்பதும் உண்மைதான்.

ஆனால், அதனை அரசாங்கம் கண்டிப்பதாகவும், அது சமா தான முயற்சிகளைப் பாதிப்பதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருப்பதுதான், கோமாளித்தனமான விடயமாகியுள்ளது.

இந்தப் பிரச்சனையை தாம் கண்டிப்பதாகக் கூற அரசுக்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது. மங்கள சமரவீர வுக்கு இன்னுமதிகளவிற்கு இது குறித்துப் பேசும் தகுதியே கிடை யாது.

உண்மையில் இயல்பாக இயங்கிய கிழக்குப்பகுதி மக்க ளின் வாழ்வோட்டத்தை, தமது சொந்தக் குற்றங்களையும், பலவீனங்களையும், துரோகத்தனங்களையும் மறைக்க - மற் றும் அது குறித்த மக்களின் வெறுப்புமிக்க கோப அலையின் எழுச் சியை திசைமாற்றி அழிக்க - நினைத்த கருணா என்கின்ற - தற்போது அரச அனுசரணையுடன் நாட்டை விட்டுத் தலைமறை வாக ஓடி, அந்நிய நாடொன்றில் ஒழிந்திருப்பதாகக் கூறப்படும் நபரின் பிரதேசவாத உணர்வை வெளிப்படுத்தும் நடவடிக் கையே காரணமாகும்.

துரோகத்தனமானதும், மோசடித்தனமானதுமான கருணா வின் சுயநல இலக்குடன் கூடிய நடவடிக்கைகளுக்காக அவரை தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அமைப்பின் சகல பொறுப்புக் களில் இருந்தும் - ஏன் சாதாரண உறுப்பினர் பதவியிலிருந்தும் கூட வெளியேற்றிய பின், தனிமைப்பட்டு ஒரு குழுவுடன் அதிகா ரம் செலுத்த முற்பட்ட அவரை தமது அரசியல் மற்றும் இரா ணுவ நலன்களுக்கு பயன்படுத்தும் நூலோபாயத்துடன் பாது காக்க முயற்சிகளை மேற்கொண்டது, இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசும், இலங்கை இராணுவப் புலனாய் வுப் பிரிவினருமே ஆவர்.

கையறுநிலையில் தன்னையும், தன்னைச் சார்ந்த சிறுகும்ப லையும் பாதுகாத்துக்கொள்ளவும், மட்டக்களப்பில் தனது ஆதிக் கத்தை வலுப்படுத்தவும் கருணா இராணுவத்தரப்பினரின் உத வியை பகிரங்கமாகவே கோரியிருந்தார் என்பதையும், அவர்களு டன் புரிந்துணர்வு உடன்பாடொன்றை மேற்கொள்ளவும் தயாராக இருந்தார் என்பது தெரிந்தவிடயமேயாகும்.

கருணாவை இராணுவத்தரப்பு பயன்படுத்த தொடங்கிவிட் டதை, அப்போது அவரைப் பாராட்டி அப்போதைய இராணுவத் தளபதி லயனல் பலகல்ல அறிக்கை விட்டதைக்கொண்டே உறுதி செய்யக்கூடியதாக இருந்தது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கிழக்கின் வன்செயல்கள் யாவற்றிற்கும் கருணாவின் குழுவினைச் சேர்ந்தவர்களே கார ணம் என்பதும், அவர்களுக்கு இராணுவத்தரப்பு ஒத்துழைப்பு வழங் கியது என்பதும் மக்களின வெளிப்படையான குற்றச்சாட்டாக இருந் தது.

கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் கருணாவின் கொட்டத்தை விடுதலைப் புலிகள் திடீர் நடவடிக்கை மூலம் ஒடுக்க முனைந்த போது, எதிர்கொள்ள முடியாது தப்பி ஓடிய அவரையும், அவரது நெருங்கிய சகாக்களையும் ஐக்கிய தேசிய முன்னணி நாடாளு மன்ற உறுப்பினர் அலிஸாகிர் மௌலானா பாதுகாப்பாகக் கூட்டிச் சென்று இராணுவத்தரப்பினரிடம் ஒப்படைத்ததும் வெளிப்படை யான செய்தியேயாகும்.

ஆரம்பத்தில் இராணுவத்தரப்பு கருணா தம்வசம் இல்லை என மறுத்தபோதும் இதே அமைச்சரே - மங்கள சமரவீரவே பின்னர் கருணாவுக்கு அரசும், இராணுவமும் பாதுகாப்பு வழங்கியதை ஒப்புக்கொண்டு அறிக்கையும் விடுத்திருந்தார்.

அமைச்சரின் இந்த ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றேபோதும். கிழக்கில் கருணா கும்பலால் ஏற்பட்ட அசம்பாவிதங்கள், வன்செயல்கள் - படுகொலைகள் அனைத்தின் பின்னாலும் அரசும் - இராணுவமும் ஏதோ ஒரு ஒத்தாசையாக இருந்துள் ளது என்பதை உறுதிசெய்துகொள்வதற்கு...

கிழக்கில் கருணாவைப் பயன்படுத்தி குழப்பங்களை ஏற் படுத்தி, விடுதலைப் புலிகளுக்கு சினம் ஏற்றி அவர்களை மீண் டும் யுத்தத்துக்கு அழைக்கமேற்கொண்ட திட்டம் பலனளிக் காதுபோனது. அரசுக்கு கிடைத்த தோல்வியேயாகும்.

கொழும்பிலோஅல்லது அதனை அண்மித்தவேறுபகுதிக ளிலோ இருந்துகொண்டு கருணா குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எதுவும், பின்புல சக்திகளின் ஆதரவின்றி மேற்கொண்டிருக்கமுடியாது என்பது எவராலும் உணரக்கூடிய விடயமேயாகும்.

அந்தப் பின்புலம் என்ன என்பதை கொட்டாவ - அத்துரு கிரிய பாதுகாப்பு மறைவிடக்கொலைகள் பகிரங்கமாக்கிவிட்ட நிலையில், கருணாவை வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்ல வைப் பதைவிட சம்பந்தப்பட்டவர்களுக்கு வேறுவழியிருக்கவில்லை.


இந்த நிலையில், கிழக்கின் படுகொலைகள், வன்செயல்க ளுக்கு அரசாங்கம் கண்டனம் செய்வதாக சமரவீர அறிவித்திருப் பது தம்மைத்தாமே கண்டிப்பதுபோன்றேயுள்ளது.

சமாதான முயற்சிகளை ஆரம்பம் முதலே எதிர்த்து வந்த தும், புரிந்துணர்வு உடன்பாட்டை அங்கீகரிக்காது புறக்கணித் ததும், இன்றைய ஜனாதிபதியும், இன்றைய அரசில் அங்கம் வகிப்போரும்தான் என்பதும் நன்கு தெரிந்த விடயமேயாகும்.

இந்த நிலையில் மங்கள சமரவீரவின் கூற்று தங்களுக்கு தாங் களே கூறிக்கொண்டு - திருத்திக்கொள்ளவேண்டிய விடயமா கவே கருதவேண்டியுள்ளது.

## நாடும் நடப்பும்

செய்தி:- சமாதான பேச்சுத் தொடர்பாக சர்வதேச அரசியல் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை.




### மருத்துவ பீட மாணவி

# புஸ்பமாலாவின் விசாரணை அறிக்கை துணைவேந்தரிடம் சமர்ப்பிக்கப்படும்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவியான கி.புஸ்பமாலாவின் பிரச்சினை குறித்து ஆராய நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிக்கை அடுத்தவாரம் தனக்குச் சமர்ப் பிக்கப்படும் என யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா சிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவியான கி.புஸ்ப மாலா - தான் பரீட்சைகளில் பழிவாங்கப்பட்டதாகத் தெரிவித்து, உண்ணாவிரதப் போராட்டமொன்றை கடந்த மாதம் நடத்தியிருந்தார்.

இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக நிர்வாகமும், மருத் துவ பீடமும், மாணவர்களும் ஆராய்ந்து அவருக்குச் சரியான நீதி வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தனர்.

இதற்கமைய யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த மூவர் அடங்கிய குழுவொன்று, பாதிக்கப்பட்டவர் தொடர்பாக ஆராயும் பொருட்டு நியமிக்கப்பட்டிருந்தது.

அந்தக் குழுவினரது விசாரணைகள் கடந்த மாதம் முதல் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களது விசாரணை முடிவுகள் இந்த மாத முடிவுக்குள் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமையவே இந்தவாரம் அந்த விசாரணை அறிக்கை துணைவேந்தரிடம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. (ப)

## நியாப் திட்ட அதிகாரி யாழ்ப்பாணம் வரவுள்ளார்

உலகவங்கியின் நியாப் திட்டப் பொறுப்பதிகாரி எந்திரி நிகால் எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் யாழ். மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என யாழ். மாவட்ட நியாப் திட்ட அலுவலகம் தெரிவித்தது.

இவர் யாழ்.மாவட்டத்தில் கடந்தகாலங்களில் நியாப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மேற்பார்வை செய்யவுள்ளதுடன், புதிய திட்டங்களை முன்னெடுப்பது தொடர் பாகவும் ஆராயவுள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி நண்பகல் 12.30 மணிக்கு யாழ்ப்பாணம் வரவுள்ள இவர் அன்று பிற்பகல் யாழ்.மாவட்ட அரச அதிபரைச் சந்தித்து உரையாடவுள்ளதுடன், அடுத்தநாள் யாழ்.மாவட்டத்தின் பலபகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

தொடர்ந்து 24 ஆம் திகதி பிற்பகல் கிளிநொச்சி சென்று அங்கும் நியாப் திட்டப் பணிகளைப் பார்வையிடவுள்ளார்.(ப)

## 'உணவுக்காக வேலை' திட்டம் பயிற்சிப்பட்டறை நேற்று ஆரம்பம்

உலக உணவுத் திட்டத்தினரால் நடைமுறைப் படுத்தப் படும் 'உணவுக்காக வேலை' எனும் செயற்பாட்டை முன்னெடுத் தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

முல்லைத்தீவு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த உலக உணவுத் திட்டச் செயற்பாட்டாளர்களும் பொறியியலாளர்களும் இதில் கலந்துகொண்டனர். இதன் தொடர்ச்சி இன்றும் இடம்பெறவுள்ளதாக யாழ் செயலக திட்டமிடல் பணிப்பாளர் சிவபாதசுந்தரம் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையானது காலை பத்துமணி தொடக்கம் மாலை நான்கு மணி வரை இடம்பெறுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் பல வறிய குடும்பங்கள் உணவுப் பொருட்களைப் பெறக்கூடியதாகவிருக்கும் எனவும், அதே வேளை - கிராம மட்ட அபிவிருத்தியையும் துரிதப்படுத்தமுடி யும் எனவும், உலக உணவுத்திட்டச் செயற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். (கு)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களும் டெங்குநோய் ஒழிப்புப் பணியில் !

டெங்குநோய் மிகவும் பாரியளவில் பரவி வருவதால் அனை வரும் இதனைத் தடுக்கவும், டெங்கு பரப்பும் நுளம்புகளை இல்லாதொழிக்கவும் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா தம் பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்க ளைக் கேட்டுள்ளார்.

சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் தமது பிரதேச கிராம சேவையாளர் பிரிவில் - டெங்குநோய் பரவியதன் காரணமாகப் புறச்சூழல் மற்றும் சமுர்த்தி பயனா ளிகளது வீட்டுச் சுற்றுப்புறச் சூழலிலுள்ள வீடுகளில் இந்த நோக்கத்தை முன்வைத்துச் சுத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட் டுள்ளார்.

நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள், நீர்த் தாங்கிகள் ஆகியவற்றைச் சுத்தம் செய்தல் அவற்றினை மூடிவைத்தல்.

சிரட்டை, வெற்று இளநீர் கோம்பை போன்றவற்றை தீயிட் டுக் கொளுத்துதல், வீடு மற்றும் படுக்கையறைகளில் நுளம்பு உட்புகாதவாறு பாதுகாத்தல், நுளம்புகளை அழிப்பதற்கு கிருமிநாசினிகளை தெளித்தல் போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்துமாறு சமூர்த்தி அபிவிருத்தி உத்தி யோகத்தர்களுக்கு பிரதேச செயலர் அறிவித்தல் விடுத்துள் ளார். (100,44)

### மட்டுவில் மத்தி

## வீடமைப்புத் திட்டப் பயனாளிகள் அரச அதிபருக்கு முறைப்பாடு

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் தென்மராட்சியிலுள்ள யா/312 மட்டுவில் மத்தி கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் தமக்கு நாளை மறுதினத்துக் கிடையில் நியாயமான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனவும், இல்லையேல் சாத்தியமான முறையில் ஜனநாயக வழியில் தாம் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டியேற்படும் எனவும் அரச அதிபருக்குக் கடிதமூலம் அறிவித்துள்ளனர்.

மட்டுவில் மத்தி கிராமிய புனர்வாழ்வு புனரமைப்புக் குழு வினரால், அனுப்பட்டுள்ள இந்தக் கடிதத்தின் பிரதிகள் தென்மராட்சி பிரதேச செயலர், யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், செயற்திட்ட இணைப்பாளர் - உலகவங்கி திட்டப் பணிப்பாளர் யாழ்.செயலகம் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (24)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை 24 மணிநேரமும் இயங்குவதில்லை

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை 24 மணி நேரமும் இயங்காததால் - மூளாய், பொன்னாலை, சுழிபுரம், தொல்புரம், காரைநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, இந்த வைத்தியசாலை 24 மணி நேரமும் இயங்கும் என வைத்திசாலை நிர்வாகம் அறிவித்தது. ஆனால், இன்றுவரை அது நடைமுறைப்படுத்தப் படவில்லை.

சகல மருத்துவ வசதிகளையும், பெருந்தொகையான நோயாளர் தங்குமிட விடுதிகளையும் கொண்ட இந்த வைத் தியசாலை - 24 மணிநேரமும் இயங்காததால் இந்தப் பகுதி யைச் சேர்ந்த மக்கள் சங்கானை அரசினர் வைத்திய சாலைக்கே பல மைல்கள் தாண்டிச் செல்லவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்களில் வடபகுதி மாவட்டங்கள் புறக்கணிப்பு

இலங்கையிலுள்ள நீர்ப்பாசனக் குளங்களில் பத்தாயிரம் குளங்களை அபிவிருத்தி செய்து, விவசாயத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் பாரிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தப் பாரிய திட்டத்தின் முதல் கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட உள்ளதனால், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆயிரம் குளங்கள் பற்றிய விபரங்கள் விவசாய கால்நடைகள் காணி நீர்ப்பாசன அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றிலேயே வன்னிப் பிரதேசத்தில் இந்த மாவட்டங்களில் இருந்து ஒரு குளம்கூட தெரிவு செய்யப்படாதிருப்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் 31 பெரிய நீர்ப்பாசனக் குளங்களும், 85 நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களும், 533 சிறிய நீர்ப்பாசனக் குளங்களு[illegible] மொத்தம் 649 நீர்ப்பாசனக் குளங்கள் உள்ளன. இருந்தும் இவற்றுள் திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து, ஆக 112 குளங்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளம், கரியாலை நாகபடுவான் குளம், அக்கராயன் குளம் என்பனவும், மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளம், பெரிய குளம், கணுக்கேணிக்குளம், முத்தையன்கட்டுக் குளம், தண்ணிமுறிப்புக் குளம், உடையார்கட்டுக் குளம் போன்ற பெரிய நீர்ப்பாசனக் குளங்களும் நூற்றுக்கணக்கான நடுத்தர, சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் கடந்த காலங்களில், போதுமான பராமரிப்பு வசதிகளற்ற நிலையில், இன்று அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசர நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தென்பகுதியில் குருநாகல் மாவட்டத்தில் 171 குளங்களும், பதுளை மாவட்டத்தில் 130 குளங்களும், அனுராதபுர மாவட்டத்தில் 100 குளங்களும் உள்ளடங்கலாக 18 மாவட்டங்களிலும் 888 குளங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (31)




## கிராம அலுவலர்களுக்கு மீள் நேர்முகப் பரீட்சை

### 30ஆம் திகதி வவுனியா செயலகத்தில்

கடந்தவருடம் கிராம உத்தியோகத்தர்கள் தரம் 1இற்குப் பதவி உயர்வு பெறும்வகையில் நடந்த நேர்முகப்பரீட்சைக்குப் புறக்கணிக்கப்பட்ட கிராம அலுவலர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி வவுனியா செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சையில் புறக்கணிக்கப்பட்ட கிராம அலுவலர்கள் செய்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட உள்நாட்டமைச்சு இந்த நேர்முகப் பரீட்சையை நடத்தவுள்ளது.

இதன்படி வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட கிராம அலுவலர்கள் இந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றமுடியும். (201)

### ஜொனிபுரம் பகுதியில் சிரமதானம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறையினரால் கடந்த இரு நாட்களாக ஜொனிபுரம் பகுதியில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

கழிவு வாய்க்கால்கள் சீராக்[illegible]ன் அத்துடன் காணப்பட்ட பற்றைகளும் வெட்டி அழிக்கப்பட்டன. நீண்டகாலமாக இந்தக் கழிவு வாய்க்கால்கள் துப்பரவு செய்யப்படாமையால் மழைநீர் தேங்கி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. (கௌ)

## கிளிநொச்சி – முல்லைத்தீவுக்கு 1.8 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

### நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களுக்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒரு கோடி 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 9 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலா 10 இலட்சம் ரூபா வீதம் 90 லட்சம் ரூபாவை கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திப் பணிக்காக ஒதுக்கியுள்ளனர்.

இதேபோல், வன்னி மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கனகரட்ணம் தனக்கென ஒதுக்கப்பட்ட 50 இலட்சம் ரூபாவையும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்காக வழங்கவுள்ளார்.

இதேபோல் - ஏனைய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலா பத்து இலட்சம் ரூபா வீதம் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்கென ஒதுக்கி, மொத்தம் 90 இலட்சம் ரூபாவை வழங்கவுள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

## வீடமைப்பு அதிகார சபையால் 100 பயனாளிகளுக்கு கடன்

கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அதிகார சபையால் சென்ற ஆண்டு 80 பயனாளிகளுக்கும், இந்தவருடம் 33 பயனாளிகளுக்கும் ஓடுகள் வழங்கப்பட்டன. இதனைவிட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 வீடுகள் இன்னமும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

இதில் 66 வீடுகளை பயனாளிகள் தமது விருப்பத்தின் அடிப்படையில் அமைக்கவுள்ளனர். ஏனைய 34 வீடுகளும் வீடமைப்பு அதிகார சபையால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. (கௌ)

## முல்லைத்தீவு அளம்பில் கடற்பரப்பில் மீன்பிடிப் படகைக் காணவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் மீனவர்களின் படகு ஒன்று காற்றிலடித்துக் காணாமல் போயிருக்கின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுவிட்டு கடற்கரையோரமாக கடலில் மிதக்க விடப்பட்டிருந்த படகே காணாமல் போயுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மீனவர்கள் படகுடன் காற்றிலடித்துச் செல்லப்பட்டு புல்மோட்டைப் பகுதியில் கரையொதுக்கப்பட்டனர்.

இவ்வாறு அடித்துச் செல்லப்பட்டவர்கள் திருகோணமலை மீனவர் சங்கப்பிரதிநிதிகளால் முல்லைத்தீவுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

எனினும், காணாமற்போன படகு இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### தேசியத் தலைவரின் பணிப்பின் பேரில்

## தமிழ்மொழி வளர்ச்சிக்கு பாடுபட்ட மேரி தெரேசா புலிகளின் குரல் வானொலியினால் கௌரவிப்பு

தமிழ் மொழி வளர்ச்சிக்காக பாடுபட்டதற்காக புலிகளின் குரல் வானெலியினால் ஓய்வுபெற்ற ஆசிரியையான மேரிதெ ரேசா பசுபதி நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டார்.

தமிழீழத் தேசியத் தலை வரின் கருத்துக்கு அமைவாகவே இவர் கௌரவிக்கப்பட்டு-

மல்லாவி வானொலி மன்றத்தினரின் நிகழ்ச்சிகளிலும், நிகழ்ச்சி ஒழுங்கமைப்புக்களிலும் பங்கு கொண்டு இவர் தமிழீழ வளர்ச்சிக்காக அரும் பணியாற்றியதாலேயே கௌரவிக்கப்பட்டார். போராளிவெற்றிச் செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் கலந்துகொண்டு இவருக்குச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார்.

மாவீரரின் தாயாரான மேரி தெரேசா பசுபதி தமிழ் ஆசிரியையாக நீண்டகாலம் பணியாற்றியவர். இவர் குமுதினிப்படகுப் படுகொலைச் சம்பவத்தின்போது தனது மகள் ஒரு வரைப் பறிகொடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புலிகளின் குரலின் மல்லாவிப் பிரதேச வானொலிமன்றத்தினரின் மாதாந்த ஒன்று கூடல் நிகழ்விலேயே இவர் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### விவசாய உபகரணங்கள் அன்பளிப்பு

மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு 9 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் [illegible]த உபகரணங்கள் மன்னார் மாவடடச் செயலகத்தில் வைத்து சம்பிரதாயபூர்வமாகக் கையளிப்பட்டன.

மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கமநல உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலதரப்பினரும் கலந்துகொண்டனர். (201)

### ஆரம்ப சுகாதார நிலைய திறப்பு விழா

யு.என்.எச்.சி.ஆரின் நிதியுதவியுடன் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணிமனையின் ஆதரவில் கனகாம்பிகைக் குளத்தில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 2.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கா.சுஜந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பொன். நித்தியானந்தன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை, உதயநகர் மேற்கில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும் அன்று மாலை 4.30 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது. (சு)





தமிழீழ காவல்துறையினரால் வன்னிப் பகுதியில் நடத்தப்பட்டு வரும் சாரதிகளுக்கான வீதிப் போக்குவரத்து குறித்த அறிவுறுத்தல் கருத்தரங்கில் கருத்துரை வழங்கப்படுவதையும், கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



## கலாசார சீரழிவு பிரசுரங்கள் விற்பனை வவுனியாவில் தடை

கலாசார சீரழிவுகளை ஏற்படுத்தும் ஆபாசக் கதைகளைத் தாங்கிவரும் பிரசுரங்களை வவுனியா மாவட்டத்தில் விற்பனை செய்வது தடைசெய்யப்படவுள்ளன.

இளைஞர்களைத் திசை திருப்பும் வகையில் பாலியல் உணர்வுகளை மையப்படுத்தி வெளிவரும் பிரசுரங்களான பிரியா, வானவில், ஜனனி போன்ற பிரசுரங்களே வவுனியா மாவட்டத்தில் விற்பனை செய்வதற்குத் தடைசெய்யப்படவுள்ளன.

இத்தகைய பிரசுரங்களைத் தடைசெய்யும்படி வவுனியா மாவட்டப் பொது அமைப்புக்கள் விடுத்த கோரிக்கையைப் புத்தக விற்பனை நிறுவனங்களின் முகாமையாளர்கள் மற்றும் முகவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் கணேசபுரம் பகுதி மக்கள் அவதி

(வவுனியா)


வவுனியா - கணேசபுரம் பகுதியில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் தாம் பெரும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதாக விசனம் தெரிவித்தனர்.

போதிய தொழில் வாய்ப்பில்லை, குடிநீர் பற்றாக்குறை, ஒழுங்காக நிவாரணம் வழங்காமை போன்ற பல பிரச்சினைகள் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

டென்மார்க் நாட்டின் அகதிகளுக்கான அமைப்பின் உதவியுடன் 112 குடும்பங்கள் இங்கு மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சுமார் 65 லட்சம் ரூபா செலவில் இந்த மக்களுக்கான வீடுகள், 100 கழிப்பறைகள், 3 கிணறுகள், 2 குழாய்க் கிணறுகள் என்பன கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் இந்தக் கிணறுகளில் தற்போது நீர் வற்றியுள்ளது.

## ஈராக்கின் நஜாவ் நகரில் பயங்கரம்

# அமெரிக்க விமானப்படையின் குண்டுவீச்சில் ஒரே நாளில் 165 பேர் பலி! 600 பேர் காயம்!!



ஈராக்கின் தென்பகுதியில் இருக்கும் குட் நகரில் ஷியா பிரிவு தீவிரவாதிகளை அடக்க அமெரிக்கப் போர்விமானங்கள் குண்டு மழைபொழிந்ததில் 75 பேர் பலியாகினர். 150 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

நஜாவ் நகரில் புனித தலமான இமாம் அலி மசூதியை அமெரிக்கக் கூட்டுப்படை முற்றுகையிட்டு இருக்கிறது. அப்பகுதியில் நடந்த பல்வேறு தாக்குதல்களில் மொத்தம் 90 பேர் கொல்லப்பட்டனர். 450 பேர் படுகாயமடைந்தனர்.

குட் நகரைத் தீவிரவாதிகளின் பிடியிலிருந்து விடுவிப்பதாகக் கூறி அமெரிக்கப் படை நேற்றுமுன்தினம் தாக்குதலைத் தீவிரப்படுத்தியது. நள்ளிரவு ஒரு மணிக்கு குண்டுவீச்சை ஆரம்பித்த போர்விமானங்கள் நகரின் சில இலக்குகளைக் குறிவைத்துத் தாக்கின. இரண்டு மணிநேரம் தொடர்ந்த இந்தக் குண்டுவீச்சால் நகரமெங்கும் தீப்பிழம்பாகப் பற்றியெரிந்தது. 18 வீடுகள் படுசேதமடைந்தன. எங்கும் அவலக்குரல் எதிரொலித்தது.

திடீர்த் தாக்குதலை எதிர்பாராத அப்பாவிகள் பலர் இதில் சிக்கிப்பலியாகினர். மொத்தம் 75 பேர் உயிரிழந்ததுடன், 150 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். பலியானவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என மருத்துவமனை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. முக்ததா அல் சதார் அலவலகம் குண்டுவீச்சில் தரைமட்டமானது. ஆனால், அப்போது அலுவலகத்தில் ஆட்கள் இல்லாததால் யாரும் பலியாகவில்லை என அந்த இயக்கத்தின் ஷேக் மொகமது இஹியா கூறினார்.

'ஈராக்கின் புனித தலங்களில் மறைந்திருக்கும் திவிரவாதிகளை ஈராக் படையினர் பிடித்து வெளியேற்றுவர், அமெரிக்க ஆதரவுப் படை உதவியுடன் இந்தப் பணி நடக்கும், அங்கு இருதரப்பினருக்கும் கடும்மோதல் நடக்கிறது' என்று இடைக்கால அரசின் உள்துறை அமைச்சகத் தகவல் தொடர்பாளர் சபா காதிம் கூறினார்.

நஜாவ மற்றும் குட் பகுதியில் எங்கு பார்த்தாலும் புகை மண்டலமாக இருக்கிறது. எங்கும் மரண ஓலம். மருத்துவமனைகளில் பிணங்கள் குவியல் குவியலாகக் கிடக்கின்றன. பிண அறை தவிர முற்றங்களிலும், நடைபாதையிலும் பிணங்கள் சிதறிக்கிடககின்றன.

புனித தலமான இமாம் அலி மசூதிமீது அமெரிக்கப்படை தாக்குதல் நடத்தினால் எண்ணெய் குழாய்களைத் தகர்ப்போம் என தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், இமாம் அலி மசூதியையும், குபா மசூதியையும் நாங்கள் தாக்க மாட்டோம் என அமெரிக்க ராணுவ அதிகாரி எரி லெஸல் தெரிவித்தார்.

புனித நகரான நஜாவ்வில் அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்த அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் அலாவி கூறினார். நஜாவ் நகரை அமெரிக்கப் படையனர் முற்றுகையிட்ட சில நிமிடங்களில் அப்பகுதி பிரதி ஆளுனர் ஜாவ்தத் காதம் நஜிம் அல் - குரோஷி தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

நஜாவ் மீதான தாக்குதல் மற்றும் குட் நகரில் அமெரிக்க ராணுவத்தின் குண்டுவீச்சைக் கண்டித்து பஸ்ரா நகரிலும், பாக்தாத் நகரிலும், பாக்தாத் அருகே காதிமியா நகரிலும் ஷியா பிரிவினர் தெருவில் இறங்கிப் போராட்டத்தில் குதித்தனர். அமெரிக்காவும், ஈராக் பிரதமர் அலாவியும் கடவுளின் எதிரிகள் எனக் கோஷமிட்டனர்.

இதேவேளை ஈராக்கில் எட்டு தீவிரவாதிகள், அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ முகவர் ஒருவரை தலையைத் துண்டித்துப் படுகொலை செய்த காட்சி இணையத்தளத்தில் வெளியானது. அவரது புகைப்படமும் வெளியானது. கழுத்தில், பார்வையாளர் என ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அட்டையை அவர் அணிந்திருந்தார்.

நான்கே நிமிடங்களில் அவரின் தலை துண்டிக்கப்பட்டுக் கண்களைத் தோண்டி எடுத்தனர். ஆனால், கொல்லப்பட்டவருக்கும் சி.ஐ.ஏ இற்கும் எந்தத் தொடர்பும் இல்லை, எங்கள் ஆட்கள் பத்திரமாக இருக்கின்றனர் என சி.ஐ.ஏ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்காவின் மூன்று ஹெலிகள் மூன்று நாடுகளில் விபத்தில் சிக்கின!

### மூன்று படையினர் பலி! 21 பேர் காயம்!!



அமெரிக்க விமானப்படையின் மூன்று ஹெலிகள் ஆப்கானிஸ்தான், ஜப்பான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் விழுந்துநொருங்கியதில் மூன்று படையினர் கொல்லப்பட்டதுடன் 21 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் எல்லைப்புறத்திலமைந்த ஆப்கான் பகுதியில் அமெரிக்க விமானப்படையினரின் பிளக் ஹொக் ரக ஹெலிகொப்டர் விழுந்துநொருங்கியதில் அமெரிக்க கடற்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 14 பேர் காயமடைந்தனர்.

ஆப்கானின் எல்லைப்பகுதி கோஸ்ட் மாகாணத்திலுள்ள குர்பஷ் மாவட்டத்தின் மேல் பறப்பை மேற்கொண்டிருந்த இந்தக் ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், தொழில்நுட்பக்கோளாறு காரணமாகவே ஹெலி விழுந்து நொருங்கியதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்த படையினர் அனைவரும் கோஸ்ட் மாகாணத்தின் சாலினோ என்ற அமெரிக்கப் படை முகாமுக்குக் கொண்டு செலலப்பட்டனர். இவர்களில் கடும்காயங்களுககுள்ளான நால்வர் பக்ராமிலுளள அமெரிக்கப் படையினரின் பிரதான முகாமில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

குறித்த ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்குள்ளானபோதும் தீப்பற்றவில்லையென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை ஈராக்கில் அல்-அன்பர் மாநிலத்தில் அமெரிக்கக் ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கியதில் இரண்டு படையினர் பலியானதுடன், மூவர் காயமடைந்தனர்.

இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலால் இந்தக் ஹெலி விழுந்துநொருங்கியிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டபோதும், அதனை அமெரிக்க இராணுவம் மறுத்துள்ளது.

இநதக் ஹெலி விபத்துக்குள்ளானது தொடர்பாகத் தாம் ஆராய்ந்துவருவதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

மூன்றாவது ஹெலி ஜப்பானின் தென் பகுதித் தீவான ஒகினாவிலுள்ள பல்கலைக் கழகக் கட்டடத்தின்மீது மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு விமான ஓட்டிகள் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சி.எச்.53 என்ற ஹெலிகொப்டரே விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. பல்கலைக்கழகக் கட்டடத்தின்மீது மோதிய ஹெலி பின்னர் பல்கலைக்கழக மைதானத்தில் விழுந்து, தீப்பற்றிக்கொண்டதாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஹெலியிலிருந்த நாலவர் காயமடைந்ததாகவும், அவர்கள் அனைவரும் மயங்கிய நிலையில் அமெரிக்க இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாகவும் தீயணைப்புப் படைப்பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர். குறித்த பல்கலைக்கழகத்தினுள் 20 பேரே விபத்து நடந்தவேளை இருந்ததாகவும், இவர்களுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பல்கலைக்கழகம் விடுமுறைகாலமாகையால் பெருமளவானோர் இருக்கவில்லையெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஈராக்கின் பஸ்ரா நகரில் வைத்து பிரிட்டன் செய்தியாளர் கடத்தப்பட்டார்

(பாக்தாத்)

ஈராக்கின் பஸ்ரா நகரில் வைத்து பிரிட்டன் செய்தியாளர் ஒருவர் இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்டார். இவ்வாறு கடத்தபபட்டவரை விடுதலை செய்யவேண்டுமெனில் நஜாவ் நகரிலுள்ள அமெரிக்கா தலைமையிலான படைகள் முற்றுமுழுதாக 24 மணி நேரத்துக்குள் வெளியேறவேண்டுமெனவும் இல்லையெனில் அவர் கொல்லப்படுவார் எனவும் கிளர்ச்சிவாதிகள் எச்சரித்துள்ளனர்.

பிரிட்டனிலிருந்து வெளிவரும் சண்டே ரெலிகிராப் பத்திரிகையின் செய்தியாளரான ஜேம்ஸ பிராண்டன் (வயது 23) என்பவரே நேற்றுமுன்தினம் அவர் தங்கியிருந்த ஹோட்டலில் வைத்து 30 ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டார்.

இவரைக் கடத்திய கிளர்ச்சிவாதிகள் ஒரு மணிநேரத்தின் பின்னர் வீடியோ ஒளிநாடா ஒன்றை வெளியிட்டனர். அதில் குறித்த செய்தியாளர் முன் இருக்க, முகமூடி அணிந்த கிளர்ச்சிவாதிகள் அவருக்குப்பின் நின்றனர்.

இதில் கிளர்ச்சிவாதிகளின் தலைவர் நஜாவ் நகரில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் 24 மணிநேரத்துக்குள் வெளியேறவேண்டுமெனவும், இல்லையெனில் கடத்தப்பட்ட செய்தியாளர் கொல்லப்படுவார் எனவும் தெரிவித்தார்.

செய்தியாளர் பிறாண்டன், அந்த வீடியோ நாடாவில் நான் செய்தியாளர் ஈராக்கில் என்ன நடைபெறுகின்றதென்பதனை எழுதுகின்றேன். எனது பெயர் ஜேம்ஸ் பிராண்டன், சண்டே ரெலிகிராப் செய்தியாளர் எனது இடம் லண்டன் எனத் தெரிவித்தார்.

ஹோட்டலுக்கு வந்த முகமூடி அணிந்த ஆயுததாரிகள், விருந்தினர்கள் தங்கும் பதிவுப் புத்தகத்தை பார்வையிடக்கேட்டதாகவும் அதனபின் அதனைப் பார்த்த அவர்கள் என்ன துணிசசலில் வெளிநாட்டுப் பிரஜைகளை ஹோட்டலில தங்க வைத்துள்ளீர்கள் என அச்சுறுத்தியதாகவும் ஹோட்டலில் பணிபுரியும் ஒருவர், ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

இதன்பின்னர் ஹோட்டலின் மேல மாடிக்கு அவர்கள் சென்றபின் இரண்டு துப்பாக்கிச் சூட்டுசசத்தங்கள் கேட்டதாகவும், பின்னர் பிரிட்டன் நாட்டு செய்தியாளரை இரத்தம் சிந்த கடததிச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

பஸ்ரா நகரில் பிரிட்டன் பிரஜை கடத்தப்பட்டது உறுதிப்படுத்தப்படாத தகவலென பிரிட்டன வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது. இநதச் செய்தியின் உண்மைத் தன்மையை அறிவதற்குத் தாம் முயற்சி செய்துவருவதாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பாக உள்ளூர் அதிகாரிகளுடன் தொடர்புகொணடுள்ளதாகவும், அடுத்துச் செய்யவேண்டிய நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## சீனாவில் வீசிய கடும் புயலால் பெருமளவு உயிரிழப்புக்கள்!



சீனாவில் நேற்றுமுன்தினம் வீசிய கடும்புயல் காரணமாக 63 பொதுமக்கள் உயிரிழந்ததுடன், இரண்டாயிரம் பேருக்குமேல் காயமடைந்ததாக சீனச் செய்திகள் தெரிவித்தன.

காயமடைந்தவர்களில் 185 பேரின நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன. சுமார் நான்கு லட்சத்து 15 ஆயிரம் மக்கள கடற்கரைப் பிரதேசங்களிலிருந்து, சூறாவளியிலிருந்து தப்புவதற்காக இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடும்புயல் காரணமாக வர்த்தக நிலையங்களின் விளம்பரப் பலகைகள் தூக்கிவீசப்பட்டதாகவும், இதனால் பொதுமக்களின் கை, கால்கள் என்பன கடுங்காயங்களுக்குள்ளானதாகவும் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

சீனாவில் இதுபோன்ற கடும் காற்றை, தான் ஒருபோதும் கண்டதில்லை எனவும் அவர் தெரிவித்தார். கடும்புயல் காரணமாக 15 பொதுமக்கள் காணாமற்போயுள்ளதாகவும், 60 பேர் கடலுக்குள் அகப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு என்பன ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக அதிகாரிகள் பொதுமக்களை எச்சரித்துள்ளனர். கடும்புயல் காரணமாக 2200 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன.




## உல்லாசப் பயணிகள் சென்ற பஸ் நூறடி ஆழத்தில் விழுந்து ஐவர் பலி

(லண்டன்)

உல்லாசப் பயணிகள் பயணம் செய்த பஸ்வண்டி வீதியிலிருந்து விலகி நூறு அடி பள்ளத்தில் தலைகீழாக விழுந்ததில் ஐந்து பிரிட்டன் நாட்டு உல்லாசப் பயணிகள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் ஒஸ்ரியாவில் இடம்பெற்றது. 42 உல்லாசப் பயணிகள் சென்ற பஸ்ஸே விபத்துக்குள்ளானது. இதில் 30 பயணிகள் காயமடைந்துள்ளனர். அதிலும் மூவரின் நிலை மோசமாக உள்ளதென அவசரகாலப் பிரிவின் தலைவரான ஹேகாட் ஹப்பர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு அவசரகால மீட்புப் பணியாளர்கள் சென்றுள்ளனர். அத்துடன் 156 செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர்கள், 132 தீயணைப்புப் படையினர் ஆகியோருடன் 40 அம்புலன்ஸ்கள், ஏழு ஹெலிகொப்டர் என்பன மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இந்தியத் தூதுவருக்கு ஜனாதிபதி பிரியாவிடை

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்னுக்கு ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் இரவு பிரியாவிடை வழங்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், முக்கிய அமைச்சர்கள் சிலர் உட்பட பல்வேறு இராஜதந்திரிகளும் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இலங்கைத்தூதுவர் பதவியிலிருந்து மாறி, ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்திய அதிகாரியாக நிருபம் சென் செல்லவுள்ளதை அடுத்து, நிருபமா ராவ் இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபமா ராவ் திருவள்ளுவர் மாவட்டம் புழல் பகுதியிலுள்ள இலங்கை அகதிகள் முகாமைச் சென்று பார்வையிட்டதாகத் தெரிவித்தார்.

## பணியாளர் கைதைக் கண்டித்து—
# மன்னார் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நேற்று ஊர்வலம்

மன்னார் நகர ப.நோ.கூ சங்கப் பணியாளர்கள் நேற்று தமது கடமைகளுக்குச் செல்லாமல் மௌன ஊர்வலமொன்றை நடத்தினர்.

கடந்தவாரம் மன்னார் உப்பளம் பகுதியில் உப்பு ஏற்றிக் கொண்டிருந்த இரண்டு ப.நோ.கூ.சங்கப் பணியாளர்களைப் பொலிஸார் காரணமின்றிக் கைதுசெய்து அநுராதபுரம் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதைக் கண்டித்தும், அவர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரியுமே இவர்கள் பணிப் புறக்கணிப்பைச் செய்ததுடன், மௌன ஊர்வலத்தையும் நடத்தினர்.

மன்னார் வயல் வீதிப்பகுதியில் அமைந்துள்ள ப.நோ.கூ சங்க தலைமைக் காரியாலயத்திலிருந்து நேற்றுக்காலை பத்து மணிக்கு ஆரம்பமான ஊழியர்களின் மௌன ஊர்வலம் அரச செயலகத்தை சென்றடைந்தது. அங்கு அரச அதிபர் விஸ்வலிங்கத்திடம் ஊழியர்கள் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர் இது தொடர்பாகத் தான் உரியவர்களுக்கு அறிவிப்பதாகத் தெரிவித்தார். (201)

# பாட்டா தொழிற்சாலையில் பரவிய தீயினால் பலகோடி ரூபா அழிவு!

இரத்மலானையில் உள்ள பாட்டா பாதணி உற்பத்தி தொழிற்சாலையில் நேற்றுமுன்தினமிரவு ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

இநத தீ விபத்தில் இரண்டு களஞ்சியசாலைகள் முற்றாக எரிந்து சாம்பலாகியிருப்பதாக கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினமிரவு 10 மணியளவில் ஏற்பட்ட இந்தத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வருவதற்குத் தீயணைப்புப் படையினர் கடுமையாகப் போராடினர். தொடர்ந்தும் தீ பரவியதால் விமானப்படையின் உதவியும் கோரபபட்டது.

விமானப்படைத் தீயணைப்புப் பிரிவினரும், தெகிவளை, கல்கிசை மாநகர தீயணைப்புப் பிரிவினரும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குக் கடுமையாகப் போராடினர்.

சுமார் 12 மணிநேர கடுமையான போரட்டத்தின் பின்னரே - நேற்றுக் காலை 10 மணியளவில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது.

இந்தத் தீ விபத்தில் பலகோடிக் கணக்கான ரூபா பெறுமதியான இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது. (01)

# அத்தியாவசிய...

பெருந்தொகையான பணத்தைச் செலவுசெய்கிறது. திறைசேரியிலிருந்து மாதாந்தம் வழங்கப்படும் பட்டியலைக் கணக்கிட்டால் அது ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

தற்போது எரிபொருட்களுக்குரிய மானியங்களை அரசாங்கம் வழங்கி வருகின்றபோதிலும், அண்மையில் எரிபொருட்களுக்கான மானியத்தை அரசு விலக்கிக்கொண்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச்சபை, ரயில்வேத் திணைக்களம் உட்பட பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரசபை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் போன்றவற்றுக்கும் மானியங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

அத்துடன், உணவு வகைகளில் பால்மா, சீனி, கிழங்கு, வெங்காயம், மிளகாய் போன்ற உற்பத்திப் பொருட்களுக்கும் இலங்கையில் மட்டுமே மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அவற்றை நீக்கும்போது பாரிய எதிர்ப்புகள் தோன்றக்கூடும்.

எவ்வாறாயினும் இவற்றை மிகக் குறுகிய காலத்தில் விலக்கிக்கொள்ள நேரிடலாம் என்றும் நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மணல் ஏற்றிவந்த...

ஏற்றிவந்த லொறிக்கு வழிவிடுவதற்காக கரையோரத்துக்குச் சென்ற வேளை, சறுக்கி விழுந்ததால் பின்னால் வந்த லொறியின் சில்லு இவர் மீது ஏறியது. இதனால் உடனேயே அந்த இடத்தில் தலைசிதறி உயிரிழந்தார். இவருடன் கூடச்சென்ற சிறுமி விழுந்ததும், வீதியில் உருண்டு லொறியின் இரண்டு சில்லுக்கும் இடையில் இருந்ததால் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மந்திகை கிராம அலுவலர் செ.அஞ்ஞானச்சந்திரா மற்றும் நெல்லியடிப் பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பருத்தித்துறை பதில் நீதிவான் சபா ரவீந்திரா சடலத்தைப் பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மந்திகை ஆதாரவைத்திய சாலைக்கு அனுப்பிவைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதனையடுத்து, சடலம் மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் நேற்றிரவு எட்டுமணியளவில் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (12,14,13)

# பெற்றோலிய ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதிப்பு

## பெற்றோலிய விநியோகம் தடைப்படும் ஆபத்து

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயமாக்கும் திட்டத்தின்கீழ் இந்திய நிறுவனம் ஒன்றுக்குக் கையளிக்கத் திட்டமிட்டிருக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையை கண்டித்து - பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்று நள்ளிரவுமுதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இதனால் கொலன்னாவ எண்ணைக் குதத்தில் இருந்து பெற்றோலிய விநியோகப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துவருகின்றன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் குறிப்பிட்ட ஒரு கிளையை, வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு கையளிப்பதற்கு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜகத் விஜய குணரட்ன தெரிவித்தார்.

இதன்காரணமாக எரிபொருள் விநியோகம் தடைப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கை தொடர்பாக பிரதியமைச்சரும், பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவரும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு கிளையையும் எந்தவொரு நிறுவனத்திற்கும் கையளிக்கும் உடன்படிக்கை கைச்சாத்திடப் படவில்லை என்று தெரிவித்தனர்.

# வாவியில் மூழ்கிய சிப்பாயின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு - வவுணதீவு வாவியில் உயிரிழந்து காணாமற்போன படையினரின் சடலம் நேற்று கடற்படைச் சுழியோடிகளின் தீவிர தேடுதல்களின் பின்னர் நேற்று நண்பகல் மீட்கப்பட்டது.

உயிரிழந்தவர் வவுணதீவு படைமுகாமில் பணியாற்றுபவரெனவும் விஜியசிறி (வயது 20) எனவும் காலியைச் சேர்ந்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மூன்று படையினர் வவுணதீவு வாவியில் தோணியில் சென்றவேளை தோணி கவிழ்ந்ததில் குறித்த சிப்பாய் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் மூவர் கடற்படையால் கைது

மனனார் விடத்தல்தீவில் இருந்து கடல் மார்க்கமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்ற மூவர் கைது செய்யப்பட்டனர்.

விடத்தல்தீவில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மன்னார் மாவட்டத்துக்கு கடல் மார்க்கமாக பயணித்தபோதே கடற்படையினரால் இம் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை மன்னார் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது மூவரும் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## முன்னாள்...

இவர் நேற்றையதினம் கிளிநொச்சியிலுள்ள வடக்கு- கிழக்கு மாகாண மனித உரிமைகள் செயலகத்தில் வைத்து, வடக்கு - கிழக்கு மாகாண மனித உரிமைகள் செயலகத் தலைவர் வண எம்எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளாரால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஊடாக அங்கு வந்திருந்த சிப்பாயின் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## பொருட்களின்...

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே கருதுகின்றோம். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என பந்துல குணவர்த்தன தெரிவித்தார்

## கருணா...

வித்தார்.

இந்த இளைஞர்கள் வீடுகளிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டே கொல்லப்பட்டிருப்பதாக ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

இவர்களின் சடலங்களுக்கு அருகில் ரி-56 ரக துப்பாக்கிச் சன்னங்கள் காணப்பட்டன.

இந்த இளைஞர்களின் சடலங்கள் தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

The Royal College of Jaffna

ஆங்கிலம் படிக்கின்றீர்களா, புத்திசாலியாகவும் இருக்கின்றீர்கள். ஆனால் கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம்.

Spoken English By :

விக்கினேஸ்வரன் ஆச்சாரி :

426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,

பிளாக் வீதி, சங்கானை. (சி-2734)

## அடுத்தவாரம் நடைபெறவுள்ள
# நாடாளுமன்ற அமர்வுகளை பகிஷ்கரிக்க ஐ.தே.க. திட்டம்!

அடுத்த வாரம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளை பகிஷ்கரிக்க ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆளும் கட்சியின் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருஜெயசூரிய மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து மோதலே இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படக் காரணமாகும்.

தேர்தலின்போது அடையாள அட்டையைக் கட்டாயமாக்க வேண்டுமென இந்தக் கூட்டத்தில் தெரிவித்த ஆளும் கட்சியினர் அது தொடர்பில் எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தவேண்டுமெனக் கோரினர்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி இது சம்பந்தமாக தமது கட்சி உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த காலம் போதாது என்பதால் விவாதத்தை தாமதித்து பிறிதொரு திகதியில் நடத்தவேண்டுமெனக் கோரினர்.

இதற்கு ஆளும் தரப்பு இணங்க மறுத்தமையை அடுத்தே இரு தரப்பிற்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலிருந்து இடையில் வெளியேறினர்.

இந்த நிலையிலேயே ஒருவார நாடாளுமன்ற பகிஷ்கரிப்புக் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசனை நடத்தியது. அது தொடர்பான முடிவு பெரும்பாலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெற்ற பின்னர் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.தே.க எம்.பி அப்துல் காதர் வைத்தியசாலையில் அனுமதி

பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைதுசெய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் அப்துல் காதர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட அன்றிரவே சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் முழு இரவையும் கதிரையில் இருந்தபடியே கழித்ததாகவும் தெரியவருகின்றது.

விசேட அதிரடிப்படையினர் சகிதம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு திடீரென இவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் ஊழல் மோசடியில் ஈடுபட்டிருப்பதாக குற்றஞ்சாட்டி இவரைக் கைதுசெய்ய முயற்சித்தனர்.

இந்தக் கைது நடவடிக்கைக்கு ஆரம்பத்தில் இவர் ஒத்துழைக்காத போதிலும், வலுக்கட்டாயமாக இவர் பொலிஸாரால் பிடித்துச் செல்லப்பட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அப்துல் காதரை விடுவிக்குமாறு கோரி கம்பளை முஸ்லிம்கள் ஜிம்மாத் தொழுகையின் பின்னர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# வன்னி பல்கலை.விவகாரம் 20 ஆம் திகதி முக்கிய சந்திப்பு

வன்னியில் பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பாக கல்வி பிரதி அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடன், எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக வன்னி மாவட்ட தமிழத் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பிரதிநிதிகளுடனான சந்திப்பில் வவுனியா வளாக ஆலோசனைக் குழுவிலுள்ள 12 பேரும், வன்னி மாவட்ட தமிழத்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (0[illegible])

## ரணிலின்..

இதற்கு ஐ.தே.கவின் ஆதரவைப் பெறும் வகையிலேயே தேசிய அரசு அமைப்பது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# மரண அறிவித்தல்

## திருமதி. சுந்தரலிங்கம் பரமேஸ்வரி



வேலணை மேற்கு, வேலணை - 7 ஐச் சேர்ந்த திருமதி சுந்தரலிங்கம் பரமேஸ்வரி 13.08.2004 ல் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா-சவுந்தரத்தின் மகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திரா, சதானந்தன் சித்திரா, சிவானந்தன், சுதேந்திரா, சுதானந்தன், சரசா ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சிறிஸ்கந்தராஜா சசிகலா, ஜெயாநிதி, சண்முகப்பிரியா, விக்னேஸ்வரன், பிரமிளா, விஜயசங்கர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று சனிக்கிழமை (14-08-2004) நண்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, நல்லடக்கத்துக்காக அம்பலவி மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் :
குடும்பத்தினர்
மகன் சு.சதானந்தன்.

(905)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.